Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 02 17 - 07 - 1992 வெள்ளிக்கிழமை ஓசை 150

## மருந்துப் பொருள்கள் யாழ். எடுத்துவரத் தடை

யாழ். மாவட்டத்தில் பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசிய மருந்துப் பொருள்களை அரச சார்புற்ற நிறுவனங்கள் எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தடை விதித்துள்ளது. இம்மாவட்டத்தில் தற்பொழுது பல்வேறு அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பலத்த பற்றாக்குறை தோன்றியுள்ளது. பற்றாக்குறையாக உள்ள மருந்துப் பொருள்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு சில அரச சார்பற்ற நிறுவ (8 ஆம் பக்கம் பார்க்க)

# பயந்து ஓடிய 4,000 படையினரை வலிந்து சேர்க்க அரசு நடவடிக்கை

## இராணுவத் தரப்பு எதிர்கொள்ளும் ஆட் போதாக்குறை நெருக்கடி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போரிடப் பயந்து சிறிலங்கா இராணுவத்தை விட்டு ஓடிய நான்காயிரத்திற்கும் அதிகமான படையினரை மீண்டும் இராணுவத்தில் கட்டாயப்படுத்தி சேர்த்துக்கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இராணுவத்தில் ஏற்பட்ட ஆட் பற்றாக்குறையும், புதிய இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்க ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையுமே இதற்குக் காரணமெனத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பலமுனைகளில் போரை விஸ்தரித்ததின் காரணமாகவும், அண்மைக்காலப் போர்களில் இராணுவத்தினருக்கு ஏற்பட்டுவரும் பேரிழப்புக்களின் காரணமாகவும் இராணுவத்தில் பெரும் ஆட்பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகின்றது. இதேவேளை, இராணுவத்தில் புதிய ஆட்களைச் சேர்த்துக் கொள்ளவும், பயிற்சி வழங்கவும் போதிய நிதியின்மை காரணமாகவே இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களை சேர்த்துக் கொள்வதில் இராணுவத் தரப்பு அக்கறை கொண்டுள்ளது.

இந் நிலையில் சிறிலங்கா இராணுவ சேவையிலிருந்து சொல்லாமல்கொள்ளாமல் விட்டுச் சென்ற சுமார் நான்காயிரம் இராணுவத்திற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர் சேவையில் மீண்டும் இணைந்துகொள்வதற்கு இராணுவ மேலிடம் இந்த மாத இறுதிவரை அவகாசம் கொடுக்க முன் வந்திருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கால அவகாசத்திற்குள் அவர்கள் சேவையில் மீண்டும் இணைந்து கொள்ளாவிட்டால் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு இராணுவ நீதிமன்ற (8 ஆம் பக்கம் பார்க்க)


## தப்பியோடியராணுவத்தினர் கொள்ளையில் தொடர்பு

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற கொலை கொள்ளை முதலிய சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளனர் என சிறிலங்கா வெளி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 70 க்கு மேற்பட்டோர் கொள்ளை திருட்டு, கன்னக்கோல் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளனர்.

சிலர் கொள்ளையில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர் இவர்களின் இவ்வாறான செயல்கள் தொடர்பாககடும்நடவடிக்கை மேற்கொள்ள இராணுவ வட்டாரங்கள் முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

## 3 வேங்கைகள் வீரச்சாவு




வீரவேங்கை கதிரவன்



2-ம் லெப்டினன்ட் வெற்றிகொண்டான்

05.07.92 அன்று கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்தவிடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை கதிரவன் (கீத் - குணசேகரம் நகுலேந்திரன் அரியாலை கிழக்கு அரியாலை) 14. 07. 92 அன்று வீரச்சாவு அடைந்தார்.

15.07.92 அன்று மணலாறு மாவட்டத்தில் ஏற்பட்டவெடி விபத்தொன்றில் 2ஆம் லெப்டினன்ட் வெற்றிகொண்டான் (நவசிங்கம் - செபஸ்தியாம்பிள்ளை கஸ்ரன்பேனாட், 2-ம் குறுக்குத் தெரு, குருநகர் யாழ்ப்பாணம்), வீரவேங்கை முருகமூர்த்தி (முருகவேல் - தங்கலிங்கம் கோணேஸ்வரன் மஞ்சத்தடி, விவேகானந்தர் வீதி இணுவில்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.



வீரவேங்கை முருகவேல்

இம்மூன்றுவீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மன்னார் – வவுனியா எல்லையில் எறிகணை வீச்சினால் மக்கள் இடம்பெயர்வு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து மன்னார் - வவுனியா எல்லைப்புறப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணைத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன் தினம் பகல் மேற்கொள்ளப்பட்ட இவ் எறிகணைத்தாக்குதலால் எல்லைப்பகுதியிலுள்ள பொது மக்களின் பல வீடுகள் சேதம் அடைந்துள்ளன. பல மைல் தூரத்திற்குச் சென்று வீழ்ந்து வெடிக்கும் இவ் எறிகணைகளால் பீதியுற்ற மக்கள் அவ் இடங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

கடந்தவருட இறுதியில் இப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் எறிகணை வீச்சுக்களால் இடம் பெயர்ந்து சென்றிருந்த இப்பகுதி மக்கள் சமீபத்திலேயே இவ்விடங்களுக்கு வரத் தொடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். அரச அதிபர் இன்று கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் உட்பட அரச அதிகாரிகளின் கொழும்புப் பயணம் தடைப்பட்டதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமை அலுவலகத்தில் ஏற்பட்ட தவறே காரணம் என தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாயன்று இவர்கள் கொழும்பு செல்ல கப்பலுக்குச் சென்றதும் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டதும் தெரிந்ததே

இது தொடர்பாக நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரிகள் யாழ். அரச அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து தலைமை அலுவலகத்தில் ஏற்பட்ட தவறுக்கு வருத்தம் தெரிவித்ததுடன் அதனால் அரச அதிபருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

அதேவேளை இன்று பருத்தித்துறையிலிருந்து புறப்படும் 'குமண' கப்பல் மூலம் அர (8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரப் பகுதியில் 8 தமிழ் இளைஞர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரப் பகுதியில் எட்டு தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிசாரினால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்த நகரில் வசிப்பதற்கான இராணுவத்தின் அனுமதி அட்டைகள் பெறப்பட்டு பொலிசாரினால் கிழித்தெறியப்பட்டன.

பின்னர் இவர்களிடம் அனுமதிஅட்டை இல்லாமையினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

# குடாநாட்டில் 100க்கு மேற்பட்ட பதுக்கல் வியாபாரிகள் கைது

## காவல்துறையின் தீவிர நடவடிக்கை

யாழ். குடாநாட்டின் பல்வேறுபகுதிகளிலும் பதுக்கலில் ஈடுபட்டிருந்த 100 க்கு மேற்பட்ட வியாபாரிகள் தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம்பகுதியிலிருந்துஇவர்கள் கைது செய்யப்பட்டனர் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருமளவு அத்தியாவசியப் பொருள்கள் பொது மக்களுக்குபங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட்டன.

மண்ணெண்ணெய், சவர்க்காரம், தேங்காயெண்ணெய் ஆகிய பொருள்களே கூடியளவில் இவர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இவற்றைக் கண்டு பிடிப்பதற்கு பொதுமக்கள் அளித்த தகவல்களே பெரும் உதவியாக இருந்ததாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

8 ஆம் பக்கத்தில்....

**க.பொ.த (உ. த) 1992 நேர அட்டவணை**

## வரி விளம்பரம்

**ஆங்கில வகுப்புக்கள்**

ENGLISH (ஆங்கிலம்) ENGLISH GRAMMAR With SPOKEN ENGLISH ஆரம்பம்; 18-7-92 சனிக்கிழமை நேரம்; பி.ப. 4-00 மணிக்கு V. N. Kondasamy A. I B. Part I (London) Inter (London) 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2823)

**புதிய நூல்கள்**

''கோப்பாய் - சிவம்'' வெளியிட்ட புதிய நூல்களை இன்னும் வாங்கவில்லையா? ''பொறுக்கிய முத்துக்கள்'' பொன்மொழித் தொகுப்பு அன்பர்களின் ஆட்டோக்கிராபில் பொறிக்க உதவும் ''பூந்தோட்டம்'' குழந்தைகளுக்கான இனிய பாடல்கள் ''நொடியும் விடையும்'' மூன்று பாகங்கள் எங்கும் கிடைக்கும். (2815)

**விற்பனையாகிறது**

அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்', 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' (கவிதைகள், சிறுகதைகள்) ஆகிய நூல்கள் வேகமாக விற்பனையாகின்றன! எல்லாப் பிரபல புத்தக சாலைகளிலும் கிடைக்கும். (சி/4703)

**உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்**

பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும் விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோ ரீவி, டெக் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். எமது புதிய முகவரி 'டில்கா வாச் வேக்ஸ்' (வானவில்கூல்பார் அருகாமை) ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (2825)

**சோதிடம்**

ஜாதகம் எழுத விவாகப் பொருத்தம்பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (2826)


## நீலஅணி வெற்றி

கடந்த 10 வருடங்களுக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் யாழ். ரோட்டரிக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட ஏழுபேர் கொண்ட 'ஹொக்கி' சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக நீல அணியினர் சாம்பியனாகி வெற்றிக்கேடயத்தினைபெற்றுக்கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக நீல அணியின் சார்பில் விளையாடிய வீரர்களான இளம்பிறையன், எஸ், ரமேஸ், நோடள்சுரேந்திரன், ஜி. டானியல் மதியழகன, பாககி றெஜினோல்ட், ரூபன் S M சத்தியமூர்த்தி ஆகியோர் பங்குபற்றினர். (05)

## விழுதுகள்

போராளிகளுக்குப் பிறப்பித்துக்கொண்டிருந்த இனிமையான குரல் தேய்ந்து போய், எதிரியை வீழ்த்திய உறுதியான கரங்கள் தாழ்ந்துபோக வீரஞ்செறிந்த வேங்கை எங்கோ தொலைந்து போனான்.

இனிமையான நண்பனை இழந்துவிட்ட சோகத்தில் எல்லோருமே சோர்ந்துபோக அந்திக்கடலில் குருதிவெள்ளத்தில் புதைந்து போனான் கதிரவன். கடற்காற்று ஊ! ஊ! என அழ ஆரம்பித்தது. ''லம்பாண்ணை சரியாம்'' லம்பாண்ணை சரியாம்'' சுற்றிலும் இளம்போராளிகள் பரபரப்பாகக் கதைக்க என்னுள் அடக்க முடியாத சோகம் அப்பிக்கொண்டது.

– மலரவன்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் கோபு - ரதீஸ்**

(பத்மநாதன் கோபுநாதன்)

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 04· 04· 1970 | 17· 07· 1991 |

ஈழ விடுதலையை என்றும் நேசித்ததால்
பாசத்தைத் துறந்து பாசறை சென்றவன்
கொட்டும் குண்டு மழையில் கோபு - நீ
தமிழீழ விடுதலைக்காய் நனைந்தவன்
நல்ல தம்பியின் தானைக் கூட்டத்தில்
கொள்கையொடு குன்ற முயர்ந்தனை.

சமரபாகு,
இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி.

இங்ஙனம்
பத்மநாதன் குடும்பத்தினர்
(சி4709)

## ஒரு கல்லூரிக்கு ஐந்து அதிபர்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரத்திலுள்ள ஒரு கல்லூரியில் ஐந்து அதிபர்கள் பணிபுரிகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்லூரி அதிபருக்கு புறம்பாக அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்த நான்குபேர் இக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இக் கல்லூரியின் தற்போதைய அதிபர், அதிபர் சேவையைச் சேராதவர். இவருக்குப் புறம்பாக அதிபர் சேவை முதலாம் தரத்தைச் சேர்ந்த இருவரும் இரண்டாம் தரத்தைச் சேர்ந்த ஒருவரும் மூன்றாம் தரத்தைச் சேர்ந்த ஒருவருமாக அதிபர் சேவையைச் சேர்ந்த மொத்தம் நான்குபேர் அண்மையில் இக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அநேக பாடசாலைகள் நிரந்தர அதிபரின்றி இயங்கும் நிலையில் அதிபர் தரத்தைச் சேர்ந்த நால்வர் இக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டதேன் என்று கல்வித்துறை சார்ந்தோர் அங்கலாய்க்கின்றனர்.

கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து எப்படியோ இந்த நால்வரும் மட்டக்களப்பு நகரப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவிட்டனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வேட்டையில் குறி தவறியது ஒருவர் பலி; ஒருவர் காயம்

(கிளிநொச்சி)

நெட்டாங்கண்டலில் பன்றிக்கு வைத்த குறி தவறுதலாக வேட்டையாடச் சென்றோர் மீது பட்டதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றொருவர் சிறுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தபுதன்கிழமைநள்ளிரவு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெட்டாங்கண்டல் காட்டுப் பகுதியில் வேட்டையாடச் சென்ற இரு குழுவினர் ஒழிகட்டி எதிரெதிரே பதுங்கியிருந்தனர். பன்றி ஒன்று நீர் அருந்த வந்த வேளை ஒரு குழுவினர் பன்றி மீது குறி வைத்து வேட்டுக்களை தீர்த்தபோது அது குறி தவறி எதிர்நிரையில் பதுங்கியிருந்தோரின் உடல்களை துளைத்து சென்றது எதிர்பாராத இத் துப்பாக்கிச் சூட்டினால் அக்கராயன் குளத்தைச் சேர்ந்த கந்தன் கணபதி (வயது 54) என்ற குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே பலியானார். வன்னேரியைச் சேர்ந்த தொம்மன் வேலாயுதம் (வயது 33) காயமடைந்தார். (ச)

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 07 - 17

1985 ஆம்ஆண்டு இதேதினத்தில் கொத்தியாவளையில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். பயஸ்** (அந்தோனிப்பிள்ளை ஜெஸ்லி - புதூர், மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு முல்லைத்தீவு- தண்டுவான் பகுதியில் பேரூந்து ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 15 - தமிழர்கள்.

மன்னார் பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 - தமிழ் இளைஞர்கள்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**வரதன்** (சின்னத்தப்பி சச்சிதானந்தம் - மாமுனை, செம்பியன்பற்று)

தெல்லிப்பழையில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எம்மைப் பிரிந்த -

**பதுமன்** (குயின்றன் குரூஸ் - பெரியபண்டிவிரிச்சான், மன்னார்)

1989 ஆம் ஆண்டு சாவகச்சேரி- முகமாலைப் பகுதியில், இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பவுண்/நிரு** (சிவப்பிரகாசம் வைகுந்தவாசன் (வாசன்) புளோப்பளைமேற்கு, பளை)

முல்லைத்தீவு-விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**உதயன்** (உதயகுமார் - குப்பிளான்)

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். நந்தன்** (வீரகத்தி இராசேந்திரம் - நெடுங்கேணி, மணலாறு)

**மிதுலன்** (மாணிக்கம் சிறிதரன்-அளம்பில், மணலாறு)

**கபில்** (சுப்பிரமணியம் முருகேந்திரன் - உடையார்கட்டு, முல்லைத்தீவு)

**யாசீர்** (சிவக்கொழுந்து கிரிசாந்தன்- சமணங்குளம், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**குணம்** (இராசேந்திரம் பாஸ்கரன் - குளமுறிப்பு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**சாள்ஸ்**

மட்டக்களப்பில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து கருகிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 9 - தமிழர்கள்.

திருக்கோணமலை, தம்புலகமம் பகுதியில். முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா-செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டு கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வே. நடவடிக்கையின் போது அப்பகுதி இராணுவத்தினருக்கு உதவியாக வெற்றிலைக்கேணியில் கடல் வழியாகத் தரை இறக்கப்பட்டு முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் கோபு ரதீஸ்** (பத்மநாதன் கோபுநாதன் - 'சமரபாகு' இலக்கணவேத்தை, உடுப்பிட்டி, யாழ்.)

**மேஜர் நகுலேஸ்வரன்/நகுலேலமாமா** (சிங்காரவடிவேல் தவக்குமார் - ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, யாழ்.)

**கப்டன் அங்கதன்** (ஜெயத்திலகா நிசாந்தன் - 'குமரன்குன்றம்', ஐயனார் கோயிலடி, சுன்னாகம், யாழ்.)

**லெப். ரவியப்பா** (சுப்பிரமணியம் உருத்திரன் - அரிப்புவீதி, சிலாவத்துறை, மன்னார்)

**2-ம் லெப். ஜோண்** (இராசேந்திரம் உதயகுமார் - 2-ம் வாய்க்கால், பன்குளம், திருக்கோணமலை)

**2-ம்லெப். செல்லக்குட்டி** (வீரகத்தி ரவிச்சந்திரன்- நெல்லியடி, கரவெட்டி, யாழ்.)

**2-ம் லெப். பாரதி** (சின்னத்தம்பி நந்தகுமார் - 154-ம் கட்டை, செல்வபுரம், முறிகண்டி, கிளிநொச்சி)

**இராமன்** (சக்திவேல் சிறிபாலகிருஸ்ணன் - தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை, யாழ்.)

**நித்தியானந்தன்** (வேலுப்பிள்ளை சிவகுமார் - சுன்னாகம் மேற்கு, யாழ்.)

**யாழன்** (செல்லையா ரவி-இலுப்பங்குளம், வவுனியா)

**அறிவொளி/சுபா** (கணேஸ் சுபாஸ்க்கரன் - இரத்தினபுரம், கிளிநொச்சி)

**சுதா** (அர்யுன் மகேந்திரன் - கண்டி வீதி, விளாங்குளம், திருக்கோணமலை)

**கீர்த்தி** (சிவகுரு ரவிச்சந்திரன் - 6-ம் குடியிருப்பு, திருக்கோணமலை)

**அலெக்ஸ்** (அழகு சத்தியசீலன் - 53, கடற்கரை வீதி, குருநகர், யாழ்.)

**செங்கண்ணன்** (தங்கன் ரகுநாதன் - கலிகை, நெல்லியடி, யாழ்.)

**பாலச்சந்திரன்** (பியதாச யேசுராஜன் - மடுவீதி, மன்னார்)

**சிவபாலன்** (சின்னத்தம்பி ஜெயராஜ் - விக்னேஸ்வரா வீதி, சங்கானை, யாழ்.)

**புஸ்ப்பன்** (பிரகாசம் நோயல் தோமஸ் - நெடுந்தீவு மத்தி, யாழ்.)

**பரணி** (முத்துவேல் காந்தலிங்கம் - வேலணை கிழக்கு ஊர்காவற்றுறை, யாழ்.)

**2-ம் லெப். குமுதன்** (வைத்திலிங்கம் தயாளன் - சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி, யாழ்.)

மணலாற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த -

**கோபு** (வெற்றிவேல் வசந்தன் - சிவன்கோயிலடி வீதி, பண்ணைக்கட்டை, பருத்தித்துறை, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4710]

அங்குமிங்குமாக சிதறிக்கிடந்த விடுதிக் கட்டடங்கள் பரிதாபமாகச் சரிந்து நிற்க முன்புற இடப்பக்கமாகச் சரிந்து வீழ்ந்து கிடந்த பெரிய நீர்த் தொட்டி கரிய யானையைப் போல பயமுறுத்திக் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் முன்பாக பரந்த வெண்மையான மணல் வெளி கோடைகாலமாதலால் உலர்ந்துபோய், ஆயினும் ஈரப்பற்றாகப் பரந்து கிடந்தது. அதன் விளிம்பில் எதிரிகளின் பாரிய ஆனையிறவு தடைமுகாம் இறுமாந்து நின்றது.

விடுதி கட்டட ஓரமாகப் பாரிய காப்பரண் ஒன்றை அமைத்து முடித்துவிட வேண்டும் எனும் ஆவல் ஆட்கொண்டிருக்க, உடற்பலம் ஏனோ துரோகம் செய்தது. என்னைச் சுற்றி நின்ற போராளிகள் அனைவரும் மயங்கி விடும் நிலையில் நின்றிருந்தாகள்.

''தண்டவாளம் தூக்கினது நாரிய நிமித்தேலாமல் கிடக்கண்ணய்''

''இனிசிலிப்பர் கட்டை தூக்கியாறது எண்டால் அரைவாசியில் மயங்கித் தான்விழுவன்'' அவனது காலில் சிலிப்பர் கட்டை ஆணி கிழித்து குருதி தாராளமாகப் பாய்ந்தது.

''பாத்துக் கொண்டிராமல் என்னத்தையாவது வைச்சுக் கட்டடப்பா' மிகவும் பலவீனமான நிலையில் நான் கூறினேன். இவ்வளவிற்கும் பகல் உணவு உண்ணவில்லை. உணவு என்னவோ நல்லாத்தான் வந்தது. அதை வைத்து விட்டுக் கைகழுவ ஓடினோமோ, மறுகணம் எதிரியின் ஷெல் உணவுப்பார்சல்களைத் தின்று விட்டது. ''இனி எங்க சாப்பாடு எடுக்கிறது. வேலையை முடிப்பம்'' மும்முரமாக ஈடுபட்டாலும் இரவு 10-00 மணியளவில் மயங்கும் நிலையை அடைந்து விட்டோம்.

''ஓராள் போய் லம்பாவையும், கராட்டி வாத்தியையும் அவங்கட வேலை முடிஞ்சா வேறையாக்களையும் கூட்டி வாடாப்பா'' சிலிப்பர் கட்டையில் குந்தியிருந்தபடி கூறினேன்.

''என்ன மச்சான் லியோ, வேலை முடியுதே?'' லம்பா தமிழை கஸ்டப்படுத்திக் கேட்டான்

''லம்பா, எங்கட வேலை இன்னும் முடியேல்லையடா. எக்கச்சக்கமாய் உயர்த்தோணும். விடியவும் போகுது. விடிஞ்சா தலைகாட்டேலாது பேந்தெப்ப செய்கிறது உங்கட பொயின்ற் கொஞ்சம் மறைவுதானே. பகலிலேயும் அடிக்கலாம். கொஞ்சப் பேரைத் தாவன்ரா'' நான் பலவீனமாகக் கூறுவதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். ''மாஸ்டர் ஓடிப்போய் மூன்று பேரை அனுப்பி விடுங்கோ. நான் நிண்டு முடிச்சிட்டு வாறன்'' லம்பா கூற, ''தம்பிக்கு இப்பதான் விளங்குது கஷ்டம், நாங்களில்லாட்டி'' வாத்தி என்னை நக்கலடித்துப் புறப்பட்டது. வேறு வேளையென்றால் வாத்தியை அமுக்கி வைத்து லம்பாவும் நானும் மண் தீத்தியிருப்போம். இப்போது அசையக் கூட முடியவில்லை.

''மச்சான் லியோ பார்த்துக் கொண்டிருந்தா சரிவராது. வா தொடங்குவம்'' தோளில் சாக்கை நான்காக மடித்து வைத்தபடி லம்பா அழைக்க நான் சாக்குடன் விரைந்தேன். தண்டவாளங்களையும் சிலிப்பர் கட்டைகளையும் இடுப்பு எலும்பு முறிய முறியச் சுமந்து வந்து குவிக்க ஏனைய போராளிகளும் சுறுறுப்பானார்கள்.

''லம்பா நீ மேல ஏறாதை நான் ஏறுறன். நீ கீழே நின்று தா.'' நான் கூற, நீ கீழ நில் நான் ஏறுறன் என அவன் கூற, ஆளையாள் இழுத்துக் கொண்டோம். மேலே ஏறினால் எதிரியின் காவலரண்களின் துப்பாக்கி முனையில் தான் நிற்க வேண்டும். வெளியான பிரதேசத்தில் அசைவைக் காட்டினால், மண்டையோடு சிதறிவிடும். இருவரும் ஏற, என்னைத் தள்ளி விழுத்தினான். குவித்த மண்ணில் 'பொத்' என விழுந்து அவனைத் திட்டினேன்.

''மச்சான் நாளண்டைக்கு சண்டை. தெரியுந்தானே. இண்டைக்கு வேலை முடிக்காட்டி எல்லாம் பிசகும்'' லம்பா கூறியபடியே மேலே அரணை உறுதியாக்கத் தொடங்கினான்.

டட்!டட்!டுட்!டுட் தோட்டாக்கள் காற்றைக்கிழித்துச் செல்லக் கொஞ்சமும் பதறப்படால் சிரித்தான். 'இறங்கடா கீழே' திட்டினேன். 'டேய்! நான் செத்தாலோ! காயப்பட்டாலோ! பறவாயில்லை. பொயின்ற அடிச்சு முடிஞ்சாத்தான் இஞ்சாலைப் பக்கம் கிளியர் பண்ணலாம். உதையெல்லாம் பாக்கேலாது. தூக்கடா மண் மூட்டையை' எத்தனை உறுதியான வாசகங்கள் வாழ வேண்டிய வயதில், தன்னைப் பற்றிக் கவலை கொள்ளாது, இந்த மண்ணை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் உயிரைக் கூடப் பந்தயம் கட்டும் புனிதமான போராளியிவன். அஞ்சாத நெஞ்சும் உறுதியும், வீரமும் இவனது உடன் பிறப்புகள். இவனின் தியாகத்தை எழுத்தில் வடிப்பது சாத்தியமற்றது.

ஆனையிறவு சமர் மூண்டு மூன்றாம் நாள் காலை, கரும்புகைகளை ஒருவாறு ஒதுக்கிக் கொண்டு தலைகாட்ட முனைந்தது. முகாமை அடுத்து அடுத்து அதிர வைக்கும் பயங்கர பசிலன்கள். பதிலுக்கு எதிரி ரவை மழையைப் பொழிய, இனிமையான காற்று திகலங்கிக் கொண்டுருந்தது, எல்லையற்ற மணற்பரப்பு மெதுவாகஇருட்போர்வையை கழற்ற ஆரம்பித்தது.

''லியோ! லியோ!!'' லம்பா பதற்றமாக அழைக்க, என்னவென்று வினவினேன். ''கராட்டி மாஸ்டர் சரியடாப்பா'' பெரும் பிரயத்தனத்தோடு கூறினான், ''என்ன! கராட்டி மா—'' என்னால் தாங்கமுடியவில்லை விரைவாக மரங்களிடையே மறைந்து மறைந்து எதிரியின் செல். ரவை மழையை ஊடறுத்து ஓடினேன்,

''சண்டையெண்டால் இப்பிடித்தான் மச்சான் தவிர்க்கேலாது. இண்டைக்கு மாஸ்டர் நாளைக்கு நீயோ! நானோ! கூடச் சாகலாம்' இப்பிடி எத்தனை பெடியளடா! வா. கொண்டே குடுத்திட்டு வருவம்'' கூறிய படி செல்ல இருவரும் மாஸ்டரின் உடலோடு மருத்துவநிலையை நோக்கி நடந்தோம்.

லம்பாவைப்பொறுத்தவரை மாஸ்ரர் அன்னியோன்னியப் போராளி சாதாரணபிரிவைக் கூட அவன் தாங்குவதில்லை. ஆனால் இன்று எதிரியின் எதிரே எப்படித்தான் மனதைத் திடப்படுத்திக் கொள்கின்றான்.. உறுதியான ஆன்மாக்களை உடல் ஆள்வதில்லை. மாறாக ஆன்மா உடலையும் புலன்களையும் ஆளும் என்பது எவ்வளவு உண்மை.

மென்மையான உள்ளம் படைத்த போராளி யுத்த காலத்தில் தன்னை எந்தளவில் உறுதியாக்கிப் போரிடுகின்றான். கண நேரத் தயக்கம் கூடப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். சண்டையில் முழுமூச்சாக இருக்கவேண்டும்'' இது லம்பா சக இளைய போராளிகளுக்கு இடுப்பில் கைகளைத் தாங்கிய படி கூறும் வாசகங்கள்.

ஆனால் அன்று மாலை முகாம் திரும்பிய லம்பா எனது கைகளைப் பிடித்துக் கொண்டு மனமுடைந்துபோய் குழந்தையாய் குமுறிக் குமுறி அழுதான். ''மச்சான் எங்கட மாஸ்டரை இனி எங்கையடா காணுறது.'' அவனை மாதிரி யாற்றா வருவான்? சீ இந்தக் கையில் தான்ரா தலையைச் சாய்த்துக் கண்ணை மூடினவன்'' வெகுநேரமாக அழுத அவனை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. ''தோழமைக்கு உரிமைகொடு கடமைநேரத்தில் தவிர்த்துக் கொள்'' எனும் வாசகம் எத்தனை தீர்க்க தரிசசமானது. ஒவ்வொரு வாசகங்களும் உன்னதமான போராளிகளை உருவாக்குவது உண்மைதான் களத்தில் எப்படித்தான் சோகத்தை மறைத்தான். இப்போ குழந்தையைப் போலல்லவா குமுறிக் குமுறி அழுகின்றான்.




சமர் ஆரம்பித்து ஆறாவது தினம் இளம்பிறை வெகு நேரத்தின் முன்பதாகவே அமிழ்ந்து விட்டது மெல்லிய தென்றல் கண்களைத் தழுவித் தூங்கடா எனத் துன்புறுத்தியது மைபோன்ற இருள் எங்குமே பரந்து பயமுறுத்த விண்மீண்கள் கண்களை சிமிட்டிச் சிமிட்டிச் சிரித்தன பலநாட்கள் தூக்கத்தைத் தொலைத்துவிட்ட நானும்



மேஜர் லப்பா

லம்பாவும் புதிய அரண் ஒன்றைப் பார்வையிட விரைந்தோம். சதுக்! புதுக்! புதிய நகரும் பதுங்கு குழிக்குள் முழந்தாள் வரை புதைந்து கொள்ள இழுத்துக்கொண்டு சென்றோம்.

''பொயின்ற பாக்கிறதை விட்டிட்டு உங்க என்ன செய்கிறாய் நான் திட்டியபடி அருகே சென்றேன் சிறுவன் ஒருவன் சண்டைக்குப்போகப் போறேன் என அடம் பிடித்துக்கொண்டு வந்து வேலை செய்தபடி நின்றான்.

மண்வெட்டியைத் தூக்கி வெட்ட முடியாத அவன் இரும்புத்தாச்சி ஒன்றை இரு கைகளாலும் பிடித்து ஊறிக் கொண்டிருக்கும் சகதியை அள்ளி அள்ளி வெளியே கொட்டினான். உயரம் போதாமையால் இரு மண் மூட்டைகள் போட்டு ஏறி நின்று கொட்டினான். வெற்று மேனி குளிரில் விறைத்துக் கிடந்தது. ''எங்கையப்பு சேட்டு? லம்பா கேட்க, ''சேத்துக்க விழுந்து தண்ண காணேல்லை'' பரிதாபமாகக் கூறினான். ''இந்தா சேட்டு போட்டுக்கொண்டு நில்லு'' விறுக்கெனக் கழற்றிக் கொடுக்க அவன் அணிந்து கொள்ள எனக்குச் சிரிப்பு வந்தது. சேட் முழங்கால் வரை மூடி நின்றது. ஆரிட்டைச் சொல்லிப்போட்டு வேலைக்கு வந்தனீ'' லம்பா வினாவ அவன் விசித்தான்.

ஒரு இளம் போராளியின் உணர்வு லம்பாவை வெகுவாகப்பாதித்தது. மௌனமாக முன்நடந்தான் ஒரு வளைவு கடக்க 'டும்'! பாரிய சத்தமும், புகையும் எழ அதை நோக்கி ஓடினோம் அந்த இடம் அச்சிறுவன் நின்று வேலை செய்த இடம் முகாமிலிருந்து சுமார் 75 M தூரம் மட்டுமே இருக்கும்.

கரும்புகை மெல்லக் கலைய நெற்றி சிதறிய வண்ணம் அவனைச் சுமந்து வந்தான் லம்பா ''என்ன காயமேடா'' ''இல்லைத்தலை சிதறிட்டுது வீரமரணமடைந்துவிட்டான்' ''உணர்ச்சிகளின் இருப்பிடத்தினின்று பிறந்த வார்த்தைகள் அவை ''இந்தக்குழந்தையின்ர வீரத்திலை எங்களுக்குத் துளியுமில்லையடா'' முன்னால் விரைந்து நடந்தான்.

இழப்புகள் ஏற்படும் போதெல்லாம் மேலும் உறுதியும்பற்றும் வளர்த்துக் கொள்பவன் லம்பா. ஐந்தரையடி உயரமும், சிவந்த நிறமும், குறைத்து வெட்டிய தலைமுடியுமாகக் கால்களை அகட்டிச் சவட்டியபடி ஒற்றைக் கையை வீசி நடப்பது அவனது தனித்துவம். ஓய்வு காலங்களில் காலை 8.00 மணிக்கு ஒரு வாளிநீருடன்தான்விழிப்பான் ஈரப்பாயைவிட்டு எழும்ப மனமில்லாது, கையை ஊன்றியபடி ''ஒரு ஜாதி ஊத்தையாளப்பா'' எனத் திட்டுவான்.

வேலணைமண்ணில் பிறந்து தவழ்ந்த லம்பா, கொழும்பில் நெடுங்காலமாக இருந்தமையால் சிங்களம் அத்துப்படியாகும். தமிழ் கூடக் கலப்பாகவே இருக்கும். இவை லம்பாவின் தனித்துவங்கள், எமது அணியில் உதைபந்தாட்டம் லம்பாவிற்கே ஒதுக்கப்பட்டதெனக் கூறலாம். கொழும்பு நகரின் உல்லாச வாழ்வை ஒதுக்கிவிட்டுத் தாய் மண்ணின் துயர்துடைக்கக் களம் புகுந்த போராளியிவன். ஆனால் தாய் மண்ணிலிருந்து எத்தனையெத்தனைபேர் இன்னமும்சொகுசுதேடிஅன்னிய தேசங்களில் தஞ்சமடையும் வேளை, இவனைப் போன்ற இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவன் எதிரிகளை எதிர்த்த வரலாறுகளை வடிக்கப் பக்கங்கள் போதாது. வீரசாகசங்களைக் கணக்கிட்டுச் சொல்வது எளிதன்று.

தமிழ் மக்களின் சிம்ம சொப்பனமாய் இன்று மௌனத்தில் மூழ்கிக்கிடக்கும் கருங்கோட்டையும் அதனருகே கடற்காற்றும் மௌனமாக உறங்குகையில் இவனை நினைத்து நிற்கும் அந்த உயர்ந்த மரங்கள், பெரிய கால்வாய்கள், எல்லாம் இவனது சிரிப்பில் சிலிர்த்தவை. இன்று மெல்லிய நீரோட்டம் விசும்ப, உயர்ந்த மரத்திலிருந்து குயில்கள், இலையுதிர்காலத்திலும் இவனுக்காய் கூ! கூ! என முகாரி பாடும்.

மாங்குளத்தின் அடர்ந்த காட்டின் அமைதியும், பரந்த வயல்களில் நெல் மணிகள் மெதுவாகச் சலசலப்பதும் இவனை நினைத்துத்தான். காட்டுமரங்கள் நினைவுச்சிதறலை கிறீச்சிடலில் நினைத்து பாடும். பரந்த குளங்களில் குளிர்ந்த தென்றல்நினைவுகளை வருடி விடும்.

கொக்கரிக்கும் சிலாவத்துறைக் கடல்கள் இவனது சீற்றத்ததை மறப்பதில்லை. மன்னார் வெளிகளின் புழுதிக் காற்று ஊ! ஊ! என எழுச்சியாக இவனையே மெச்சி நிற்கும். பசுக்கள் இவனை எண்ணிம்பா! ம்பா! எனக் கதறியழுது கண்ணீர் பெருக்கும், துயரம் நெஞ்சை அடைக்க விம்மியழும் காட்டு மிருகங்கள்.

காரை நகரின் சுடுகாட்டு அமைதி இவனை எண்ணி மௌனமாக அழுது வடிக்க, அருகான கடற்தரைகளில் சோகத்தால் நெற்றியை மோதி உடைக்கும்.

ஆனையிறவில் உன் பாதச் சுவடுகள் பக்குவமாக அழியாதிருக்க தென்றல் சீற்றமாகி வீசுவதில்லை. பாதச் சுவடுகளை முத்தமிட்டு உன் பின்னே தொடரும் சின்னஞ் சிறிய ஆமைகள். கட்டைக்காட்டின் ஈச்சம்பற்றைகள் உனது குருதியை சிவப்புச் சிவப்பு முத்தாகத் தேக்கிக் குலைகுலையாகச்சிந்திநிற்கும், வீதியோர உயர்ந்த விருட்சங்கள் ஸ்! ஸ்! எனக் கிளைகளை அசைத்து உனை நினைந்து பெருமூச்செறியும். வயற் பரப்புகளில் ஆட்காட்டிக் குருவிகள் இரவு பகலாக அடிக்கொரு தடவை கீ! கீ! எனச் சோகமான குரலில், நரம்புகளில் குருதி தெறிப்பதைப் போல் கூவிட்டுக் கூவிட்டு அழுது, அலைந்து நிற்கும்.

''எங்கே எனது மைந்தன்'' பெரிய விடிவெள்ளி பரந்த மணற்பரப்பை உலுக்கி, அடிக்கொரு தடவை விழியை வெட்டி அழ, ''ஐயோ! என் மைந்தா!'' கட்டைக்காட்டு கடல் ஐ! ஓ!, ஐ! ஓ! என மணலில் மோதி உள்ளத்தைச் சிதறடிக்கும். நெற்றியை உடைக்கும் உன்பசுமையான நினைவுகளைஈழத்து இயற்கை என்றுமே மறக்காது.

சென்றஆண்டு வெற்றிலைக் கேணி, புல்லாவெளி பரந்த வெளிகளில் வரலாறு காணாத யுத்த அரங்கு திறக்கப்பட்டதோ! அதேபோல் தமிழீழத்தைத் துண்டாக்கும் பகீரதப் பிரயத்தனத்தை ஆக்கிரமிப்பாளன் இந்தஆண்டும், பெரும் பதற்றத்தின் மத்தியில் ஆனித் திங்கள் 28 ஆம் நாள் காலை இன்னுமோர் யுத்தஅரங்கைத் திறந்தான்.

புயலுக்கு முந்திய அமைதியாக உறங்கிக் கிடந்த மணல் வெளிகள் புலி வீரர்களின் செங்குருதியால் மீண்டும் சிவக்கத் தொடங்கியது. எம் புனித மண்ணை ஆக்கிரமிப்பாளனின் அழுக்குப் பாதங்களும், வாகன அரக்கன்களின் இரும்புச் சங்கிலிகளும், விண்ணேஅதிரும் ஷெல்குண்டுகளாலும் ஆக்கிரமிக்கத் தொடங்கின.


வெட்டவெளிகளில் புல்லர்களை எதிர்த்துப் புலி வீரர்கள் பாயத் தொடங்கினார்கள். சிங்களப் படைகள் திணறத் தொடங்கி ஆகாயப்போர் அரங்கைப் புலிகளுக்கெதிராகத் திறந்து விட்டது.

30 ஆம் திகதி அந்திவானில் அஸ்தமிக்கும் சூரியன் குருதியில் குளித்து மேற்கே சாயும் வேளை, குண்டு அதிர்வுகளால் மணற்பரப்பே தடுமாறிக் கொண்டிருக்க, காற்று அதிர்வைத் தாங்காது எங்கோ தொலைந்துவிட, இனிமையான போராளி, அவன்தான் லம்பா. துப்பாக்கி கனலும் தீயை விழிகளில் சுமந்து பொருது கொண்டிருந்தான்.

பூமியை நசிக்கும் செயின் டாங்கிகளைத் துணிவாகநின்று தாக்கிக் கொண்டிருந்த வேளை, கட்டளைகளைச் சக

(2 ஆம் பக்கம் பார்க்க)

# கலையன்னையின் சூழ்நிலையில் வாழும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது



பொன் சுந்தரலிங்கம்

பொன். சுந்தரலிங்கம் இசை உலகம் மிகவும் பெருமைப்படக் கூடிய ஒரு இசைக் கலைஞர். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சங்கீத பூஷணம் கற்கை நெறியில் முதல் மாணவராகத் தேறியவர். தமிழ் இசை உலகுக்கு நன்கு பரிச்சயமானவர். தமிழ்நாட்டில் திருச்செந்தூர், சிதம்பரம். மதுரை மீனாட்சி அம்பன் கோயில் மற்றும் திருவனந்தபுரம், சிங்கப்பூர், மலேசியாவிலும் கச்சேரிகள் செய்திருக்கிறார். பதினைந்து இசைப்பதிவு நாடாக்களை வெளியிட்டுள்ளார். 1971-ல் இளம் கலைஞர் மன்றத்தை ஆரம்பித்து நடத்திவரும் இவர், இளம் கலைஞர்களைப் பாராட்டி எண்பத்தொன்பது தங்கப் பதக்கங்களை வழங்கியுள்ளார். வானொலியிலும், ரீ. வி. முதல்தர வித்துவானாக அமர்த்தப்பட்டிருக்கிறார் இப்போது சட்டநாதர் கோயிலருகில் இருபது பரப்புக் காணியில் இவர் தொடங்கியிருக்கும் கலாமண்டபம் ஒரு சிரஞ்சீவி முயற்சி. நாட்டு நிலை காரணமாக அது ஸ்தம்பிதமடைந்துள்ளது. இவரது மனைவி ரஞ்சனா அடையாறு கர்நாடக இசைக் கல்லூரியில் வித்துவான் பட்டம் பெற்றவர்.

பேட்டி கண்டவர்

**மதன்**

**நீங்கள் இசைக் கலைஞர் ஆனது எப்படி? அதற்கு ஏதாவது காரணம் உண்டா?**

★ எனது தகப்பனார்பொன்னம்பலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடல் கடந்து சிங்கப்பூரில் பணிபுரிந்தவர். அவர் நடிப்புக் கலையில் தேர்ந்தவர். சிங்கப்பூரில் சபா நாடகங்களில் நடித்துள்ளார். அதிலும் ஸ்திரீ வேடத்தில் நன்றாக நடிப்பாராம். சூழ்நிலைதான் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது என்று கூறுகிறார்கள். ஆழ்ந்த கலைஞானம் படைத்த காலஞ்சென்ற வித்துவான் சி. ஆறுமுகம் எனது மாமனார். இசையைப் பற்றி உபயோகமாகப் பேசிக்கொண்டிருப்பார். தம்மால் இயன்ற வகையிலெல்லாம் எனக்கு ஊக்கமளித்து வந்தார். வில்லுப்பாட்டு ஆறுமுகமும், 1970 களுக்கு முன்பு ஜோடிப் பாட்டுப் பாடுவதில் கொடிகட்டிப் பறந்த லிங்கம் சகோதரர்கள் எனக்கு மிகவும் நெருக்கமான இரத்த உறவினர்கள். எப்போதுமே கலையன்னையின் சூழலிலேயே வாழும் அதிஷ்டம் எனக்குக் கிடைத்தது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் படித்த காலத்தில் பள்ளிக்கூட விழாக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் எனது மனச் சாந்திக்காகப் பாடினேன். அப்போது எனக்கு ஆர்வம் உண்டாகிநான் கற்றுக்கொண்டேன் என்று சொல்ல முடியாது. பாடும் திறமை இருந்ததால் பாடினேன். அவுஸ்திரேலிய கிரிக்கட் ஆட்டக்குழு எமது கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தது. அவர்கள் முன்னால் பாடும்படி எனக்குப் பணிக்கப்பட்டது. உற்சாகமாகப் பாடினேன். எனது பாடல்கள் அவர்களிடையே பிரமாதமான வரவேற்பைப் பெறப் போகிறது என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கணமே கங்காரு இலச்சினை பதித்த தங்கத்தினாலான ஒரு பதக்கத்தை எனக்குத் தந்தார்கள். இதை எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை எனலாம். அதன்பிறகுதான் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1962 இல் இருந்து நான்கு வருடங்கள் இசை பயின்றேன். நான்கு வருடங்களும் பல்கலைக் கழக விடுமுறைக்குக்கூட யாழ்ப்பாணம் வராமல் இசை பயிலத் தொடங்கினேன். இசை மேதைகளான தண்டபாணி தேசிகர் ரி. கே. ரங்காச்சாரியார், மயிலம் வச்சுரவேலு முதலியார், திருபாம்புரம் சிவசுப்பிரமணியம்பிள்ளை, எஸ். வேணுகோபால் ஐயர் ஆகியோரிடம் இசைக் கலையின் சிறப்பைக் கற்றறிந்தது ஒரு பாக்கியமென்று கருதுகிறேன். முழு நேரமும் இவர்களிடம் இசை பயின்றதால் இந்த மேதைகளின் மேதா விலாசத்தைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு எனது இசை வாழ்க்கைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தந்தது.

**சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னால் கர்னாடக இசைப் பயிற்சியோடுதான் மேடையில் கச்சேரி செய்தார்கள்-இன்றைக்கு இந்த நிலை மாறி வருகிறது. ஏன்?**

★ கர்நாடகசங்கீதம் கற்பது குரு-சிஷ்ய முறைப்படி மரபாகத் தொடர்ந்து வரும் ஒரு காரியம். நமது கர்நாடக ராகங்களையும், அற்புதமான வடிவத்தையும், கீர்த்தனையின் அர்த்தத்தையும் ஒரு தலைமுறையிலிருந்து இனனொரு தலைமுறைக்கு வழங்கப்படும் முறைகளில் சில முறைகள் உள்ளன. இவை எமது கலை முறைகள். எல்லாவற்றிற்குமே பொதுவான அம்சங்கள. இன்று சிலர் அரங்கேற்றத்துக்காகவே சில உருப்படிகளைப் படிக்கிறார்கள். இன்று அரங்கேற்றம் சமூகத்தில் உயரிகளின் சமூக அந்தஸ்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. கல்யாணப் பெண்ணுக்கு வீணை, பாட்டு, பரதம் ஏதோ தெரிய வேண்டும் என்ற நிலைஉருவாகியுள்ளது. அரங்கேற்றத்துக்காக இசை பயிலும் நிலையும், எல்லாப் பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் ஏதாவது ஒரு கலை பயில வேண்டும் என்ற பேரவாவும் இருக்கிறது. மேலும், பயனற்ற பொழுது போக்குக் கச்சேரிகள் சிலவற்றையும் காணமுடிகிறதுதான். இந்த வேற்று வழிகளையெல்லாம் கலை வெளியீடாகக் கருத முடியாது. இன்றைய கர்நாடக இசைக்கலைஉலகில் பிரகாசிக்கும் கணபதிப்பிள்ளை, திலகநாயகம் போல் பத்மலிங்கம், பாலசிங்கம், நாகேஸ்வரி பிரமானந்தர், ஜகதாம்பிகை பரமநாதன், வயலின் ராதாகிருஷ்ணன் வழி முறைப்படி இசைக் கச்சேரிகளைச் சிறப்பாகச் செய்துவருகிறார்கள். எமது நாட்டில் பிரபலஸ்தர்களாக விளங்கும் நாதஸ்வர சக்கரவர்த்திகள் தங்கள் நாயனத்தில் கர்நாடக இசையை வாசிக்கும் அழகே அழகு. தவில் வித்துவான்களும் சிறப்பாகச் செய்கிறார்கள். இதனை எமது இளந் தலைமுறையினர் பின்பற்ற வேண்டும். இக்கலையில் இளைஞர்கள் சாஸ்திரீயமாகப் பயிறசி பெற வேண்டும் என்பதுதான் எனது ஆசை. நாம் எதைக் கற்கிறோமோ அப்படியே ஆகின்றோம்.

**கர்னாடக இசைக்கு இல்லாத கவர்ச்சியும், விளம்பர பலமும் மெல்லிசைக்குஇருக்கிறது. இந்தப் போக்கிற்கு மெல்லிசைக் குழுக்கள் பாவிக்கும் மேற்கத்திய வாத்தியங்களும் ஒரு காரணம் என்பதை நீங்கள்ஏற்கிறீர்களா?**

★ விளம்பர பலம் மெல்லிசைக்கு அதிகமாக இருக்கிறது என்பது உண்மைதான். சமீப காலத்தில் மெல்லிசை நிகழ்ச்சியில் புதுமையான மேற்கத்திய ''இன்ஸ்ருமென்டுகளும்'' புகுத்தப்பட்டதால் இந்த இசையின் மேல் மக்களுக்கு நாட்டம் வந்தது. மேற்கத்திய இசை மோகம் உடையவர்கள் மெல்லிசையினால் ஈர்க்கப்படுகிறார்கள். கிடார், டிரம்ஸ் போன்ற மேற்கத்திய வாத்தியங்களால் கவரப்படுகிறார்கள். எளிமையான வார்த்தைகளால் அமைந்த பாடல்களையும், இலகுவான தாள லயத்தையும் மக்கள் ரஸிக்கிறார்கள். ஆனால் கர்நாடக இசைக்கு ஆழமான ரசிகர்கள் உண்டு. அவர்கள் பாடுகிற பொருளுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்கள்.

**கர்னாடக சங்கீதத்தினால் தமிழிசை பாதிக்கப் படுகின்றதா?**

★ மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகளும், தீட்சிதரும், சமா சாஸ்திரியும் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் கீர்த்தனைகளைப் பாடி வைத்து விட்டார்கள். புரந்தர தாசருக்குக் கன்னடம். ஆனால், இவர்களுடைய பாடல்களில் சங்கதிகள் இருக்கின்றன. இசைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடப்பட்டிருக்கின்றன. இதனால்தமிழ் மக்கள் இசையால் கவரப்பட்டார்கள். தெலுங்கு இசையும், தமிழிசையும் கர்னாடக இசையே. கர்னாடக சங்கீதத்தின் எழுச்சியால் தமிழ் இசை புறக்கணிக்கப்பட்டது. தமிழிசைக்கும் புத்துயிர் ஊட்டிக் காப்பாற்றவே ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் தமிழ் சங்கத்தை ஏற்படுத்தினார். இந்நிலையில் பாவனாசம் சிவன், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். கருத்துத் தெரிந்த பாடல்களைப் பாடினார்கள். இந்த வழியில் காலஞ்சென்ற தண்டபாணி தேசிகர், மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

**கர்நாடக இசை பாமர மனிதரைப் புறக்கணித்து வருகிறது என்று கூறப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?**

★ கர்நாடகஇசை சாஸ்திரப் புனிதமுடையது. கச்சேரிகள் வரப்புக்குள்ளேயே அடங்கியதாக இருக்கும். கச்சேரிசெய்பவர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியே நடப்பர். ஒரு முழுமையான கச்சேரி என்றால் ஐந்து உருப்படிகள்தான் பாடலாம். இதனை ரசிக்கிற தன்மை மக்களிடம் இருக்கிறது. கர்நாடக இசையில் அறிவுள்ளவர்கள் தான் இதை விரும்பிக்கொள்ள முடியும். இருக்கப்பண்ணித்தான் பருக்க வேண்டியிருக்கிறது. இருக்கப் பண்ணுவதற்கு முதல் வசப்படுத்த வேண்டும். தமிழ் நாட்டில் என்றால் கர்நாடக இசைக்கு நிறைய ரசிகர்கள் உண்டு. அங்கு அடிக்கடி கச்சேரி நடக்கும். திருமண விழாக்களிலிருந்து கோவில் திருவிழாக்கள் வரை எல்லா இடங்களிலும் கச்சேரி நடக்கும். இன்னும் சொன்னால், திருமணங்களுக்கும் திருவிழாக்களுக்கும் எங்களைப் பணம் கொடுத்து அழைக்கிறார்கள். மக்கள் கர்னாடக இசைப் பாடல்களை விரும்பி ரசிக்கிறார்கள். எங்களை அழைக்கிறார்கள். கர்னாடக இசை பாமர மக்களால் புறக்கணித்து வருகிறது என்பது அபவாதம்.

**சங்கீதத்தை அனுபவிக்க அதன் நுணுக்கங்களையும் கீர்த்தனங்களின் அர்த்தங்களையும் தெரிந்திருக்க வேண்டுமா?**

★ கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்பதல்ல பாடுகின்ற பொருளின் அர்த்தம் தெரிந்திருந்தால் ரசிகத் தன்மை கூடலாம். சங்கதி கூடிய பாடல்களை ரசிப்பதற்கு இசை நுணுக்கம் அடிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டும். பெரிய வாக்கிய காரர்களின் உருப்படிகளை உண்மையிலேயே ரசித்துப் பயன்பெற வேண்டுமானால் அதன் கருத்துத் தெரிந்திருக்க வேண்டும். இசை வடிவங்களைத் (சங்கதிகள்) தெரிந்து இன்புற வேண்டுமாயின் இசையை நன்றாகத்தெரிந்திருப்பது நன்று.

**சீர்காழி கோவிந்தராஜன் கச்சேரியை முற்றாகப் பிரித்து விடுவார். முதலில் கர்னாடக இசை. அடுத்தது மெல்லிசை, மூன்றாவது சினிமா இசை, இது போல் கச்சேரியைப் பிரித்தால் என்ன?**

★ ஜனரஞ்சகமாகச் செய்ய வேண்டும்என்பதற்காகச் செய்கிறோம். முதலில் ஒரு மணி நேரம் கர்நாடக இசையா

[6 ஆம் பக்கம் பார்க்க)

## விடிவெள்ளி தெரிகிறது

இருண்டு போன எங்கள்
தேசவானில்
விடிவெள்ளி தெரிகிறது
துவண்டு போன எங்கள்
மனங்களில்
சுதந்திரக் காற்றின்வாடை
மெல்ல
வீசத் தொடங்கி விட்டது
எதிரியின் கால் பட்டு
சுருண்டு போன பயிர்கள்
புலிகள் இறைத்த செந்நீரால்
மீண்டும்
துளிர்க்கிறது
முகாரியை மீட்டிய
இதழ்களில்
இப்போது
பூபாளம் பூக்கிறது
எங்கள் பெருமூச்சால்
உஷ்ணமான
நிலவு கூட
இப்போது
தண்ணொளியைப் பொழிகிறது
கடற்புலிகளை விழுங்கிய
கடல்களில்
தமிழீழத்தின் விம்பம்
தெரிகிறது.
மக்கள் புரட்சி
வெடிக்கிறது
மாவீரர்கள்
கண்ட கனவு
நனவாகும் நாள்
நெருங்குகிறது
செருக்களத்தில்
புலிகள் ஆடும் சமர்
மைல் கல்லாக
எங்கள்
தமிழீழத் தேசவானில்
விடிவெள்ளி
தெரிகிறது

– உருத்திரபுரம் மயூரதி

## யாழ்ப்பாணம்

# இப்பொழுதும் முற்றுகைக்குள் இல்லை

**நிலாந்தன்**

பலவேகய இரண்டின் 'வெற்றியை' தளபதிகள் ஒரு இரவு மட்டும்ம கொண்டாட முடிந்தது. அடுத்தடுத்த நாட்கள் கிழக்கிலும், வன்னியிலும் நிகழ்ந்த பயங்கரமான தாக்குதல்களின்போது மொத்தம் 70 இற்கும் குறையாத துருப்புக்கள் கொல்லப்பட்டனர். இது தளபதிகளைத் திடுக்கிடச் செய்திருக்கும். பலவேகய இரண்டின் வெற்றி குறித்து அதிகம் பெருமைப்படுவதோ, மகிழ்ச்சியடைவதோ விவேகமற்றது என்பதையும் உணர்த்தியிருக்கும். இப்பொழுது எழுந்துள்ள கேள்வியும் இதுதான். பலவேகய இரண்டின் வெற்றி திட்டவட்டமானதா? நிச்சயமானதா?

இராணுவம் எதிர்பார்த்திருந்ததை விடவும், கணித்திருந்ததை விடவும் அதிகம் விலைகொடுத்தே அவர்களால் இயக்கச்சியை அடைய முடிந்தது. இயக்கச்சி வரை துருப்புக்கள் நகர்ந்ததும் பலவேகய இரண்டு முடிந்து விட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் சில நாட்கள் கழித்து பலவேகய இரண்டு இன்னும் பூர்த்தியாகவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. இதிலிருந்து ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது கடல் நீரேரி வழியாக குடாநாட்டை முற்றுகையிடுவதற்கான இறுதி எத்தனமே பலவேகய இரண்டு என்பதுதான் ஆனால் இயக்கச்சி வரையிலுமான நகர்வு யாழ்ப்பாணத்தைத் தனிமைப்படுத்தவில்லை. இராணுவ முகாம்களிற்கிடையிலான ஆபத்தான நீக்கல்களிற் கூடாகத் தனது கஷ்டப் பயணங்களைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணம் தயாராகி விட்டது. எனவே பலவேகய இரண்டை மேலும் தொடர வேண்டிய கட்டாயம் தளபதி சிசில்வைத்தியரட்ணாவிற்கு உண்டாகியுள்ளது. அடுத்த கட்டமாகக் கிளாலிப் பாதையை மூடுவதற்கு அவர்கள் முயலக்கூடும்.

பலவேகய இரண்டின் ஆதாயங்களைப் பேணுவது என்றால் அதாவது பலவேகய இரண்டின் வெற்றியைப் பயனுள்ளதும், பிரசார முக்கியத்துவம் உடையதும் ஆக்குவது என்றால் தளபதி சிசில் வைத்தியரட்ணா அநேகமாக இரு வழிகளில் சிந்திக்க வேண்டியிருக்கும்.

1. ஆனையிறவுப் பாதையைத் திறக்குமாறு புலிகளைக் கோருவது அல்லது.
2. குடாநாடு தனிமைப்பட்டுள்ள சூழலில் யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிப்பது.

ஆனையிறவுப் பாதையைப் போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு புலிகளைக் கோருவது என்பது இராணுவம் குடாநாட்டை நீக்கலற்ற முற்றுகைக்குள் கொண்டு வந்ததன் பின்னரே சாத்தியப்படும். எனவே குடாநாட்டிற்கான மிஞ்சியுள்ள நுழைவாயில்களையும் மூடுவது வரை பலவேகய இரண்டை நீடிப்பதற்கே சிசில் வைத்தியரட்ணா விரும்புவார். ஆனால் அப்போதும்கூட பலவேகய இரண்டின் வெற்றியை ஒரு பருவகால வெற்றியாக மாற்றுவது என்று புலிகள் சிந்திப்பார்களேயானால், ஆனையிறவுப் பாதை திறக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் மேலும் குறையும். வருகிற மழையோடு இயக்கச்சிக்கும், கட்டைக்காடு வெற்றிலைக் கேணிக்குமான தரைப் பாதையில் நீர் நிரம்பி விடும். இதன்பின் அப்பாதை நெடுகக் காவலரண்களைப் பேணுவது மிகவும் சிரமம் எனவேதான் பலவேகய இரண்டின் ஆதாயங்களை அனுபவிப்பதற்கு குறுகிய கால அவகாசமே உண்டு எனஇராணுவ உயர் பீடம் நம்புவது போல் தெரிகிறது. அவ்வாறெனில் அடுத்த கட்டத் தாக்குதல் எதையும் மழைவர முன்புஆரம்பிக்கவே தளபதி சிசில் விரும்புவார். ஏனெனில் கால நிலையும் துருப்புக்கள் நகர்வதற்கு வேண்டிய தரை அமைப்பும் தனக்குச் சாதகமாக இருப்பதாக இராணுவம் நம்புகிறது. கடல் நீரேரி வற்றியதும் யாழ்ப்பாணத்துக்கான சமர் ஆரம்பமாகும் என்று சில மாதங்களிற்கு முன்பு 'ஏசியா வீக்' சஞ்சிகைக்கு இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் குடாநாடு மிகவும் தனிமைப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அவதானிகள் கருதுகிறார்கள். சாதகமான அகப்புற நிலமைகளைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணத்திற்கான சமரை சிசில் வைத்தியரட்ணா விரைவில் ஆரம்பிக்கக் கூடும் என்ற ஊகங்களும் சில அவதானிகளிடம் காணப்படுகின்றது. பலவேகய இரண்டினை யாழ்ப்பாணத்திற்கான சமரிற்குரிய பிரதான முஸ்தீபு நடவடிக்கை என்றே அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இராணுவ ரீதியாக குடாநாடு ஓரளவிற்கு முற்றுகையிடப்பட்டிருப்பதாலும், இந்தியா புலிகளைத் தடை செய்து விட்டு, புலிகளின் தலைவரையும், புலனாய்வுத்துறைத் தலைவரையும் குற்றவாளிகளாக்கும் முயற்சியில் மும்மரமாக ஈடுபட்டிருப்பதாலும் மேற்குலகிடமிருந்து சமாதானத்திற்கான வெளிப்படையான சமிக்கைகள் எதுவும் தென்படவில்லை என்பதினாலும் யாழ்ப்பாணம் மிகவும் தனிமைப்பட்டுள்ள இன்றைய சூழலில் யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிப்பது பற்றி தளபதி சிசில் சிந்திக்கக் கூடும் என்றும் மேற்படி வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஆனால் பலவேகய இரண்டில் களைப்புற்ற துருப்புக்களைத்திரட்டி, இன்னொரு பெரிய, பிரதான தாக்குதலை உடனடியாக ஆரம்பிப்பதற்கு இராணுவத்திடம் உள்ள வளங்கள் போதுமா? என்றும் சில அவதானிகள் கேட்கிறார்கள். இவ்வருடத்தின் ஆரம்பத்தில் 76,500 துருப்புக்களுடனிருந்த இராணுவம் ஒபறேசன் சண்டமாருதத்தின் போது 80,000 துருப்புக்களைக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. சமீப காலங்களில் புதிய படையணிகள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றன. புலிகளும் யாழ்ப்பாணத்துக்கான சமரை தோற்கக்கூடாத ஒரு சமராகவே கருதுவார்கள். இச்சமரிற்கென்றே அவர்களிடம் தனியானதும், விசேடமானதுமான சேமிப்பு ஒன்று நிச்சயமாக இருக்கும். வேறு எந்த அவசரமான சமரிற்காகவும் இச்சேமிப்பிலிருந்து வெடிப்பொருட்களையோ, வேறு எதையுமோ அவர்கள் செலவழிக்கப் போவதில்லை. எனவே சமர் மிகவும் பயங்கரமானதாக இருக்கும். முற்றுகையிடப்பட்ட நிலையிலும் யாழ்ப்பாணம் தனது வலிமையனைத்தையும் திரட்டிப் போராடும்.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானதிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சமர் ஒரு புதிரான பயங்கரமாகவே இன்றுவரை உள்ளது. கொழும்பிலுள்ள விமர்சகர்கள் (குறிப்பாக றோகான் குணசேகர - ஐலண்ட்) யாழ்ப்பாணத்துக்கான சமர் இதோ ஆரம்பமாகிறது இதோ ஆரம்பமாகிறது என்று பலமுறை சொல்லிக்களைத்துப் போய் விட்டார்கள். இராணுவமும் பல தடவைகள் குடாநாட்டைப் பிடிக்கப் போகிறது என்ற ஒரு திகிலை மக்களிடம் பரப்பி விட்டு வேறொரு இலக்கை நோக்கி நகர்ந்திருக்கிறது. இந்நிலையில் உலகின் கவனத்தை அதிகம் ஈர்க்காத விதத்தில், ஈர்க்காத ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கானசமரை ஆரம்பிப்பதற்காக சிசில்வைத்தியரட்ணா காத்திருக்கிறார் என்றும் கருதமுடியும். முன்னைய அறிவிப்புக்களைப் போலவே இம்முறையும் இது ஒரு திசைதிருப்பும் அறிவிப்பு என்று யாழ்ப்பாணம் உசாரற்றிருக்கும் ஒரு ரகசியமான நாளில் இராணுவம் யாழ்ப்பாணத்தைத் தாக்கப்போகிறது. சில சமயங்களில், வெளியுலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நீண்ட தொடரான தாக்குதலாக அமையாமல், பரபரப்பின்றிய விதத்தில் படிப்படியாக இடைவெளிவிட்ட தாக்குதல்களில் இறுதியானதாகவும் அது அமையலாம்.

ஆனால் எல்லாவற்றிற்கும் அப்பால் யாழ்ப்பாணம் தாக்கப்படுமாக இருந்தால் புலிகள் ஜனாதிபதி பிரேமதாசாவுடனான சமாதானத்தைஇழக்கத் தயாராகிவிடுவர் என்பதே மெய்யானது. இனப்பிரச்சினையில் இந்தியாவைத் தொடர்ந்தும் ஈடுபாடற்ற ஒரு பார்வையாளராகவே வைத்திருக்க விரும்பும் பிரேமதாசா அவ்வாறாயின் புலிகளுடனான சமாதானத்தை இழக்கத்தயாராக இருப்பாரா?

# அனைத்துத் துறைகளிலும் பங்கெடுக்கும் "லேசர்"

புதிய உயர் தொழில் நுட்பத் துறை இன்று வேகமாக வளர்ந்து உலகத்தை நவீன தகவல் தொடர்பு யுகமாக மாற்றியுள்ளது. இது வரை காலமும் கைத்தொழில் யுகமாக இருந்த உலகம் இன்று நவீன தகவல் தொடர்பு யுகமாக மாறிவருகிறது.

இவை இன்று உலகைச் சுருங்கச் செய்து விட்டன. உயர் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் துரித மாற்றம் இது வென்று கூறலாம்.

செய்மதிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், வீடியோத் தொழில் நுட்பம், கம்பியூட்டர்கள் போன்றவை இன்று கல்வித்துறையில் அமைதியான முறையில் மிகப் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இந்த வகையில், செல்வம் கொழிக்கும் நாடுகளில் சிறு சிறு நிறுவனங்கள் வெளியிடும் பத்திரிகைகள் கூட இப்போது புதிய உயர் தொழில் நுட்பத்தை நாடத் தொடங்கி விட்டன.

இந்த நாடுகள் இவற்றுக்காக மறைந்த ஆனால் உயர் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்துகின்றன. மலிவான புதிய உயர் தொழில் நுட்பம் என்னும் போது சாதாரண கம்பியூட்டர் கருவிகள், லேசர் ஒளிக்கதிரால் இயங்கும் அச்சுக் கோக்கும் கருவிகள் என்பன இதில் அடங்குகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதனால் அதிக லாபம் பெற முடிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறு பத்திரிகை நிறுவனங்கள் வேறு அச்சகங்களில் அச்சுக் கோப்பு வேலையைச் செய்வித்து, பின் அதைக் கொண்டு வந்து ஒட்டி, பக்கங்களை தயாரித்து பத்திரிகைகளைத் தயாரித்து பத்திரிகைகளைப் பிரசுரிப்பது வழக்கம். இதற்கு அதிக பணம் செலவாகிறது. போதிய லாபமும் பெற முடிவதில்லை.

கம்பியூட்டர் பாவனைக்கு வந்திருப்பதால் ஒரு சிறிய பத்திரிகையின் ஆசிரியர் தாமே முழுப் பத்திரிகையையும் ஒரு சாதாரண கம்பியூட்டர் கருவியின் திரையில் அச்சுக் கோத்து பக்கங்களை வடிவமைத்து விட முடிகிறது.

இந்தப் புதிய உயர் தொழில் நுட்பம் வெளிநாடுகளில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து இலகுவாக அச்சிடுவதற்கு குறுகிய காலத்தில் அதிக லாபம் பெறுவதற்கு உதவுகிறது. லேசர் ஒளிக்கதிரால் அச்சுக் கோப்பதும் இலகுவான காரியமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரண ஒளி வெவ்வேறு அலை நீளங்களும் வெவ்வேறு அதிர் வெண்களும் வெவ்வேறு திசையில் பரவிச் செல்லும் தன்மையும் கொண்டது. இந்தச் சாதாரண ஒளியில் இருந்து ஒரே திசையில் செல்லும் தன்மையையும் ஒரே அலை நீளத்தையும் ஒரே அதிர்வெண்ணையும் கொண்ட ஒளி அலைகளை லேசர் கருவி பிரித்தெடுக்கிறது.

இவ்வாறு பிரித்தெடுத்த ஒளி அலைகளை ஒன்று திரட்டி, ஒரு தனி சக்தி மிக்க ஒளிக்கதிராக மாற்றுகிறது லேசர் கருவி. இந்தத் தனி ஒளிக்கதிர் மிகுந்த பிரகாசமும் சக்தியும் வாய்ந்தது.

ஆங்கிலத்தில் இந்த நடைமுறையை (*Light AmpliFiCation By Stimulated Emission of Radiation*) என்கிறார்கள். இதன் முதல் எழுத்துக்களின் சுருக்கமே ''லேசர்'' (*Laser*) எனப்படுகிறது. இந்த லேசர் ஒளிக் கதிரால் இயங்கும் கருவியையே அச்சுக் கோப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்

இந்த உயர்ந்த தொழில் நுட்பத்தை, மருத்துவத் துறையில் நுண்ணிய அறுவை சிகிச்சை சம்பந்தப்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுகிறது.

கண்விழி விறைப்பு நோய், கண் விழியின் பின்புறத் திரையில் உண்டாகும் நோய்கள் மற்றும் மூளை, இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகவும் இந்த லேசர் கருவி உதவுகிறது.

சிறுநீரகத்தில் காணப்படும் கற்களை அகற்றுவதற்கும் லேசர் சிகிச்சை முறையே பெரிதும் உதவுகின்றது.

அறுவை சிகிச்சைகளின் போது சதையைச் சேர்த்துத் தைப்பதற்குப் பதிலாக லேசர் கருவி துணையால் சதை ஒட்டப்படுகிறது.

எக்ஸ்ரே படத்தை டெலக்ஸ் மூலம் அனுப்புவதற்கும் இப்போது முடிகிறது. புகைப்பட எலக்ரோனிக் அமைப்பு ஒன்றில் இப்படியான படங்களைப் பதித்து வைத்து வேண்டும் போது டெலக்ஸ் மூலம் படங்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இதனால் மருத்துவர்கள் துரிதமாக இயங்கவும் முடிகிறது.

எங்கு வேண்டுமனாலும் சுமந்து செல்லக் கூடிய லேசர் கருவி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்துள்ளார். அழிவுகள் ஏற்படும் இடங்களுக்கு இலகுவில் தூக்கிச் சென்று ஏற்படவிருக்கும் அழிவுகளை முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் விதத்தில் இக் கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

பல துறைகளிலும் புதிய உயர் தொழில்நுட்பம் வியத்தகு சாதனை புரிந்து வருகிறது என்பது தெளிவு. விவசாயத் துறையை எடுத்துக் கொண்டாலும் பழம், விதை, தானியம் போன்றவற்றில் பூச்சிகள் அழிவை ஏற்படுத்தி விடுகின்றன. இந்த அழிவினை ஏற்படுத்தும் பூச்சிகள் சத்தம் ஏற்படுத்தும் போது அந்த சத்தத்தினைக் கேட்டு அறிந்து கொள்ள புதிய முறை ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. பழத்தின் அல்லது விதையின் உள்ளே இருக்கும் பூச்சி அதை உண்ணும் சத்தத்தை வெளியிலிருந்து கேட்டு, உள்ளே பூச்சி இருக்கிறதா என்பதைக் கண்டறிய இந்த முறை உதவுகிறது.

தொகுப்பு - வீரகேசரி

> செயற்கை மாணிக்கம், கண்ணாடிப்படிகம், ஹீலியம், நியான் வாயுக்கள் என்பவற்றிலிருந்து 'லேசர்' தயாரிக்கப்படுகிறது. ஒற்றை அதிர்வு எண்களில் மின் காந்தக் கதிர் வீச்சுக்களை வெளியிடும் லேசர் ஒளிக்கதிர்களைப் போலல்லாது இணையாகச் செல்புவை. இதனால் இது விண்வெளிப் பயணத்தில் அதிகம் பயன்படுகிறது.

கலையன்னையின் கவே நானும் பாடுகிறேன். அடுத்து பக்தி இசையாகப் பாடுவேன். தமிழ் உணர்வுப் பாடல்களாகவும் அமையும். எங்கள் நாட்டிலுள்ள ஸ்தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் பாடுவேன். கச்சேரி செய்யும் ஸ்தலத்தைப் பொறுத்து அநேகமாக முருகன் கோயில் என்றால் முருகன் பற்றியும், அம்பாள் கோயில் என்றால் அம்பாள் பாடல்களும் பாடுவேன்.

இப்போதெல்லாம் வாய்ப்பாட்டானாலும், நாதஸ்வரக் கச்சேரியானாலும்பக்க வாத்தியகாரர்களின் 'ஆதிக்கம்' அதிகமாக இருக்கிறது. இசைக்கு இது ஆரோக்கியமான செயலாகுமா?

★ இந்தியாவில் பக்கவாத்தியக்காரர்களின் ஆதிக்கம் அதிகம். இலங்கையில் அப்படியான நிலை இல்லை. தரமான பாடகரோடு தரமான பக்கவாத்தியக்காரன் தனது வித்துவத்தைக் காட்ட முயல்வது இயற்கையே. அப்படியானால் கச்சேரி முழுமையாக அமையும். முழுமையான கச்சேரியில் பாடல்கள் ஒரு 'அப்லாஸ்' பெறுவதும், அதே போன்று பின்னணி வாத்திய இசைக்காரர்கள் 'அப்லாஸ்' பெறுவதும் கச்சேரியின் நிறைவைக் காட்டுவதாகும்.

திரை இசையில் தரம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

★ ஆரம்பகாலத்தில்பத்மினி சகோதரிகள் மூலம் சினிமாவில் பரத நாட்டிய உருப்படிகள் சாத்தியமாயிருக்கின்றன. இப்படித்தான் கிட்டப்பா தியாகராஜ பாகவதர், எம். எஸ். வசந்தகோகிலம் ஆகியோர் சினிமா என்ற மொழி மூலம் கர்நாடக இசையை வெளிப்படுத்திக் கொண்டார்கள். இந்த விஷயத்தில் பாலமுரளி கிருஷ்ணன், யேசுதாஸ் சீர்காழி ஆகியோரின் சாதனைகள் மிகப்பெரியன.

## அறிவித்தல்

### மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஒத்திவைத்தல்

யாழ். கோட்ட கூட்டுறவாளர்களால் சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு 18-07-1992 அன்று யா/ கனகரத்தினம் (ஸ்ரான்லி) ம. வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த மேற்படி போட்டிகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
யாழ்கோட்டம்.
(சி/4715)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் அங்கதன்

(ஜெயத்திலகா நிசாந்தன்)

வீரஜனனம்: 31-01-1970
வீரச்சாவு: 17-07-1991

தமிழீழத் தாயகமென தாயக மண்ணை மீட்க
போர்க்களம் புகுந்த வீரவேங்கையே
நீ விட்டுச் சென்ற துப்பாக்கிகள் விடிகின்ற
வரைக்கும் சடசடக்கும்
ஆனையிறவு சரித்திரப் போரில் நீ
சிந்திவிட்ட செங்குருதி சிவப்பேற்றும்
மண்ணதனை வென்றெடுப்போம் விரைவினிலே.

(இந்தப் பாலைவனப் போரில் களப்பலியான அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்)

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம். (2822)

இங்ஙனம்
நண்பர்கள்

## நீங்காத நினைவில்
## 45- வது நாள்

தாயின் மடியில் 12-9-1969



தாயக மண்ணில் 3-6-1992

### லெப். ஈழவன்

( பிரேம் மாஸ்ரர் என அழைக்கப்படும் )
ஐயாத்துரை சண்முகேஸ்வரன்

இவனெம் கண்ணென எண்ணி யாமிருந்தோம்
அவன்தன் மண்ணினை கண்ணென மதித்திருந்தான்
பயிற்சிகள் எடுத்தான் பயிற்சிகள் கொடுத்தான்
பைந்தமிழ் காத்திட வேங்கையாய் பாய்ந்தான்
பெற்றவர் கண்ணன் எனவே அழைத்தோம்
பெற்றமண் தனக்கு ஈழவன் ஆகினாய்
பயிற்சியின் போதினில் பிறேமென அழைத்தனர்.
பாரினில் இன்று மாவீரன் ஆகினாய்.

கௌரி இல்லம்,
தேவரையாளி,
நெல்லியடி வடக்கு.

பெற்றோர், உடன் பிறந்தோர்,
மைத்துனர், நண்பர்கள்.
( சி/ 4706 )

## ஈராண்டாய் கதறுகின்றோம் உனக்காக............



### லெப். கேணல் றீகன்

(இராசையா சிற்றம்பலம் – வெல்லாவெளி மட்டக்களப்பு)
(பாலையடி வெட்டையில் சிறிலங்காப் படையினருடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு)

வீரஜனனம்: 06 - 11 - 1963
வீரச்சாவு : 17 - 07 - 1990

மீன் மகள் ஈன்றெடுத்த
உத்தமனே றீகா!
எம்மினம் காத்திடவே
ஈழமொன்று தேவையென்று
வேங்கையாய் பாய்ந்திட்ட...
வேந்தலே றீகா
உன்வழி தொடர்ந்திடுவோம் என்றுணர்ந்தே
நீ அன்று எங்களை விட்டகன்றாய்...

காலத்தின் தாலாட்டில் கூட...
எங்கள் கண்ணீர் மாறவில்லை உன்நினைவால்
ஆனால் ..
காலதேவன் சக்கரம் இங்கு
திசைமாறிச் சுழன்றாலும்
உன் வழியே இனி
எம் விழிகளும் போகும்...

கப்டன் ஜிம் கெலி
சனமூகநிலையம்,
றீகன் நகர், யாழ்ப்பாணம் (சி/4708)

மட்டக்களப்பு, அம்பாறை
வாழ் மக்கள் சார்பாக
றீகன் நகர் மக்கள்

# அயோத்தியில் ராமபிரானுக்குக் கோயில்: நரசிம்மராவ் அரசிற்கு புதிய நெருக்கடி

'இந்தியாவின் ஜெருசலேம்' அயோத்தியாகும், இந்துக்கள் இப்பகுதியை ராமபிரான் அவதரித்த புனித பூமியாகக் கருதும் அதேவேளை முஸ்லிம்கள் பாபரின் மசூதி அமைந்துள்ள வணக்கத்திற்குரிய இடமாகக் கொள்கின்றனர். தற்பொழுது இங்குள்ள பாபர் மசூதி ராமபிரானின் ஆலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளதாக இந்துக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் முஸ்லிம்கள் இதனைத்திட்டவட்டமாக மறுக்கின்றனர்.

இந்துக்களையும் - முஸ்லிம்களையும் பொறுத்து இது ஒரு உணர்ச்சிபூர்வமான பிரச்சினை. இப்பிரச்சினை 1850ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகிவிட்டது. இதற்காகப்பலபோர்கள் நடந்தன. பல இனக்கலவரங்கள் நடந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிந்துள்ளார்கள். இப்பிரச்சினை மீண்டும் இப்பொழுது நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

ஆனால் உணர்ச்சிபூர்வமான இப்பிரச்சினையை அரசாங்கங்கள் தமது அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்தின. அன்று பிரிட்டிஷார் இதனை ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகக் காட்டி அரசியல்லாபம் தேடினர். பின்னர் ஆட்சிக்கு வந்த இந்திய அரசியல்வாதிகள் வழமைபோலவே தமது வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கெனத் தேவைக்கேற்ற விதத்தில் இப்பிரச்சினையைக் கையாண்டனர்.

## பாரதீய ஜனதாவும் ராமர் கோயிலும்

அண்மைக் காலத்தில் இந்திய அரசியலில் பாரதீய ஜனதாக் கட்சி, விஸ்வ இந்து பரிசத் என்பன்வற்றின் எழுச்சி இப்பிரச்சினையை மேலும் தீவிரமடையச் செய்தது. ஒரு கோயில் விவகாரம் இந்தியஅரசியலையே ஆட்டிப்படைக்கும் விடயமாகமாறியது இதனால் ஆட்சிக் கவிழ்ப்புகளும் இடம் பெறும்நிலைஉருவாகியுள்ளது.

1989 இல் ஆட்சிக்கு வந்த வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கம் மண்டல் கமிசனைப் பற்றிப் பிடித்தபோது பாரதீய ஜனதாக்கட்சி ராமர் கோயிலைப் பற்றிப் பிடித்தது. அதாவது வி. பி. சிங் 'தாழ்ந்தப்பட்டவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும்' சாதி ரீதியாகப் பற்றிப் பிடித்து வாக்கு வங்கிகளை நிரப்ப முற்பட்டபோது, பாரதீய ஜனதாக் கட்சி சமய ரீதியில் இந்துக்களையும் அதனடிப்படையில் 'உயர்சாதியினரையும்' பற்றிப் பிடித்து வாக்கு வங்கியை நிரப்ப முற்பட்டது, இதில் வி. பி. சிங் தோல்வி அடைய வேண்டியும் வந்தது.

தற்பொழுது, அதாவது சிறுபான்மை காங்கிரஸ் அரசாங்கம் பதவி ஏற்று சுமார் ஒரு வருடத்தின் பின்னர், மீண்டும் அயோத்தியில் ராமர் கோயில் விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது பாரதீய ஜனதாக்கட்சி ராமர் கோயில் விவகாரத்தை மீண்டும் கிளப்பியுள்ளது

1991இல், இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக்கட்சி அயோத்தியில் ராமபிரான் பிறந்த இடத்தில் அதாவது பாபர்மசூதி அமைந்துள்ள இடத்தில் ராமருக்கு ஆலயம் அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்து, இவ்வாக்குறுதியே பாரதீய ஜனதாக்கட்சி என்றுமில்லாதவாறு நாற்பிற்கு மேற்பட்ட பாராளுமன்ற அரசாங்கங்களையும், மூன்று மாநிலங்களில் ஆட்சியையும் கைப்பற்றியது. குறிப்பாக அயோத்தி அமைந்துள்ள உத்திரபிரதேச அரசைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால், சுமார் ஒரு வருடமாக இப்பிரச்சினையை ஆறாப்போட்டு வந்த பாரதீய ஜனதாக்கட்சி தற்பொழுது இப்பிரச்சினையில் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி கோயில் அமைக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சியின் இந்நிலைப்பாடு, அயோத்தியில் இராமருக்கு ஆலயம் அமைத்தல் என்பதை விட சரிந்துவரும் கட்சியின் செல்வாக்கை நிலை நிறுத்துவதோடு, காங்கிரஸ் ஆட்சிக்கு நெருக்கடி கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

## பாரதீய ஜனதாவின் பின்னடைவுகள்

பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஆட்சிசீராக நடைபெறவில்லை இதற்கு மாநிலப் பாரதீயஜனதா தலைவர்களுக்கு இடையில்போட்டிநிலவுவதே காரணமாகும் இந்நிலையில், இம்மாநிலங்களில் சரிந்துவரும் கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்துவது பாரதீய ஜனதாக் கட்சிக்கு அவசியமாகிறது.

அத்தோடு, பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் முரளி மனோகர்ஜோசி, பெரும்விளம்பரத்துடன் ஆரம்பித்த ஏக்தா யாத்திரையும் - ஒற்றுமைப் பயணம் - தோல்வியில் முடிவுற்றமை அக்கட்சிக்குப்பெரும் ஏமாற்றமாகும். கன்னியாகுமரியில் ஆரம்பித்த 15,000 கிலோமீற்றர் நீளமான இப்பாத யாத்திரை காஷ்மீரின் தலைநகரான சிறிநகரில் இந்தியா குடியரசுத்தினத்தன்று முடிவுறுவதாக இருந்தது. பாதயாத்திரையின் முடிவில், சிறிநகரில் இந்திய தேசிய கொடியை முரளிமனோகர்ஜோசி ஏற்றுவதாகவும் இருந்தது. ஆனால், பாதயாத்திரை கஷ்மீர் மாநிலத்தின் எல்லையிலேயே குழப்பமடைந்தது. ஜோசி விமானத்தில் சென்றே சிறிநகரில் கொடியேற்ற வேண்டியும்வந்தது.

இவ்வாறாக அரசியல் பின்னடைவுகளைச் சந்தித்துவந்த பாரதீய ஜனாதாக் கட்சிக்கு கடைசியாக நடந்த இடைத்தேர்தலும் பெரும் இடியாக அமைந்தது. 1991 பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்ற டில்லித் தொகுதியை இடைத் தேர்தலில், இந்திராகாங்கிரஸிடம் இழக்க வேண்டி ஏற்பட்டது. அத்தோடு, இவ்இடைத்தேர்தலில், உத்தர பிரதேசத்திலும் சில சட்டமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ்கட்சிவெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி பெற்ற இவ்வெற்றிகளானது பாரதீய ஜனதாக் கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதோடும் அல்லாமல், வடமாநிலங்களில் கடந்த பொதுத்தேர்தலின் போது தோற்கடிக்கப்பட்டகாங்கிரஸ் மீண்டும் பலம் பெற்றுவருவதாக ஐயப்பாட்டையும் எழுப்பியது.

## நரசிம்மராவின் ஏமாற்று

மேலும், இந்திய ஜனாதிபதித் தேர்தலில். நரசிம்மராவ் அரசாங்கம் நடந்துகொண்ட முறை பாரதீய ஜனதாக் கட்சிக்குப் பெரும் ஏமாற்றம் அளித்த தொன்றாகவும் அமைந்தது. ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததில் இருந்து கருத்தொருமைப்பாடு மூலம் ஒற்றுமைகாணலும், ஆட்சி நடத்துதலும் எனக்கூறிவந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வெளிப்படையாகவும், பேச்சளவிலும்அக்கருத்தைவற்புறுத்துபவராக இருந்து வந்தாரே ஒழிய ஒருபோதும் முக்கிய விடயங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் தீர்மானத்தை ஏற்பவராக இருக்கவில்லை. மாறாக, இந்திரா காங்கிரசின் வழமையான பாணியில் மற்றைய கட்சிகளுக்கிடையிலும் கட்சிகளுக்கு உள்ளும் உடைவுகளை ஏற்படுத்துவதிலும் அவர்களை அணிசேர்ப்பதிலுமே அக்கறை காட்டினார். தேசிய முன்னணிக்குள் முரண்பாட்டை வளர்த்தமையும் தெலுங்குதேசம் ஜனதாதளம், சிவசேனா ஆகியவற்றிற்குள் உடைவுகளை ஏற்படுத்தியமையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்

இதன் உச்சக்கட்டமாக அமைந்ததுதான் பிரதமர் நரசிம்மராவ் இந்திய ஜனாதிபதி தேர்தலில் சங்கர் தயாள் சர்மாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தமையும் உபஜனாதிபதிக்கு காங்கிரஸ் கட்சிக்காரர்ஒருவரைநியமிக்கமுற்பட்டுள்ளமையாகும். ஆரம்பம் முதலே பாரதீய ஜனதா கட்சி ஜனாதிபதி ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கும் பட்சதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் உப ஜனாதிபதியாக இருக்க வேண்டும் எனக் கோரிவந்தனர். இது குறித்து ஆரம்பத்தில் காங்கிரஸ் மௌனம் சாதித்தும் வந்தது. இந்நிலையில் காங்கிரஸ் திடீரென உப ஜனாதிபதியாகவும்காங்கிரஸ்காரரைக்கொண்டுவர எண்ணியமை பாரதீய ஜனதாக் கட்சிக்கு மேலும் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



## மீண்டும் கோயில் விவகாரம்

இந்நிலையில்தான் மீண்டும் ராமர் கோயில் அமைத்தல் என்னும் உணர்ச்சி பூர்வமான பிரச்சினையை பாரதீய ஜனதாக்கட்சி எடுத்துள்ளது இதன் மூலம் தொண்டர்களையும், தோழமைக் கட்சிகளையும் திருப்திப்படுத்துவதோடு சிறுபான்மை அரசான காங்கிரஸ் அரசாங்கத்தை ஆட்டங்காண வைப்பதற்கு பாரதீபஜனதாக் கட்சி முடிவுசெய்துள்ளது.

ஆனால், தேசிய முன்னணி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு இப்பிரச்சினை உதவியது போன்று, காங்கிரஸ் ஆட்சியை கலைப்பதற்கு இது உதவுமா என்பது கேள்விக்குரியதே அன்று வி.பி. சிங் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ்கட்சி பார்வையாளனாகப் பிரச்சினை எதிலும் பங்கு கொள்ளாமல் இருந்தது. அதே வேளை, வி.பி. சிங் அரசாங்கம் கவிழவேண்டும் என எண்ணியது. இந்நிலையே பாரதீய ஜனதாக் கட்சி கொடுத்தநெருக்கடிக்கு அரசாங்கம் பணிய வேண்டிவந்தது. அத்தோடு, தேசிய முன்னணிக்குள் முரண்பாடும், ஜனதா தளத்திற்குள் காணப்பட்ட உடைவும் சாதகமாக இருந்தது.

ஆனால், இன்று இந்நிலை இல்லை. காங்கிரஸ் கட்சிக்கு அதன் கூட்டாளிகளைச் சேர்த்தால், அறுதிப் பெரும்பான்மைக்கு மிகவும் குறைந்தளவு ஆசனங்களே பற்றாக் குறையாகவுள்ளது. அதே வேளை, ராமர் கோயில் விவகாரத்தில், இடது சாரிகளின் ஆதரவு காங்கிரஸ் அரசாங்கத்திற்கு இருக்கும் எனவும் எதிர்பார்க்கலாம். அதே வேளை, ஜனதா தளமும் அரசாங்கத்தை தீவிரமாக எதிர்க்க முடியாத நிலையிலேயே உள்ளது. அத்தோடு, ஜனதா தளத்திலிருந்து வெளியேறியவர்களைச் சேர்த்துக்கொள்வதில்காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது

அதாவது கடந்த ஒரு வருட காலத்திலும்அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது அதனை, எதிர்க்கட்சிகளுக்குள் காணப்படும் முரண்பாடுகளைக் கையாள்வதன் மூலம் நரசிம்மராவ் அரசாங்கம் வெற்றி கொண்டது போல், இவ்விவகாரத்திலும் வெற்றி கண்டு விடலாம்.

ஆனால், பாரதீய ஜனதாக் கட்சி இவ்விவகாரத்தின் மூலம், தொடக்கி வைக்கும் வன்முறையானதுநரசிம்மராவ் அரசாங்கத்திற்கு புதிய சுமைகளை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது அதாவது, இந்தியாவிற்கு திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகமாக்கியுள்ள நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு உருப்பு வன்முறைகளும், சொத்துக்களின் அழிப்பும் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

அதேவேளை, பாரதீய ஜனதாவிற்கும், மத்திய அரசிற்கும் இடையில் ஏற்படும் இப்பிரச்சினையானது; இந்தியாவில் பெரிய மாநிலம் ஒன்றின் அரசாங்கத்திற்கும், மத்திய அரசிற்கும் இடையில் ஏற்படும் பிரச்சினையாகவும், மத்திய மாநில அரசுகளின் உறவுநிலை அதிகார வரம்புகள் குறித்த பிரச்சினையாகவும் மாறக்கூடும். இந் நிலையில், இப் பிரச்சினை இந்தியாவின் அரசியல் பெரும் நெருக்கடி ஒன்றையும் உருவாக்கலாம்.

**- ஜெயராஜ்**

---

## டிப்ளோமா பயிலும் ஆசிரியர்களுக்கு சலுகை

(யாழ்ப்பாணம்)

அங்கீகரிக்கப்பட்டபல்கலைக் கழகங்களில் பட்டப்பின் தகவுத் தேர்வுப் (டிப்ளோமா) பாடநெறியினைப் பயிலுகின்ற ஆசிரியர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு கல்வி உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் வெளிவாரியாகப் பட்டப்பின் தகவுத் தேர்வுப் பாடநெறியினைப் பயிலுகின்ற ஆசிரியர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களில் சரிபாதியை மாகாணசபை ஏற்கவேண்டும் என்றும்,

வெளிவாரி மாணவர்களாகாக இப்பாடநெறியினைப் பயிலுகின்ற ஆசிரியர்கள் 50 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தால் வெள்ளிக்கிழமை நாட்களில் படிப்பு லீவு வழங்கும்படியும் அனைத்துப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் ஏற்கனவே பட்டப்பின் பாடநெறியைப் பயிலும் ஆசிரியர்களுக்கும் பொருத்தமாக இருத்தல் வேண்டும் என்றும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆங்கில ஆசிரியர் நேர்முகப்பரீட்சை

(பருத்தித்துறை)

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களை வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்குப்பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாதம் 22 ஆம் திகதி வடமராட்சி கோட்ட அலுவலகத்தில் நடைபெறும் எனவும், இப்பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்த இளைப்பாறிய அரசாங்க உததியோகத்தர்கள் வேண்டிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கவேண்டுமென வடமராட்சி கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரு. செல்லத்துரை அறிவித்துள்ளார். (25)

## இடம் பெயர்ந்த மீனவருக்கு கடன் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மீனவர்களுக்கு கடன் வசதி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமது தொழில் முயற்சியை புனரமைப்பதற்கும், முதலீடு செய்வதற்கும் வசதியாக குறுகிய காலக் கடன் வசதிகளை வழங்குவதற்கு மக்கள் வங்கி முன்வந்திருக்கிறது.

இவர்களுக்குசுமார் 25ஆயிரம் ரூபா வரையிலான கடன்வழங்கப்படும். இக்கடன் தவணை அடிப்படையில் மீண்டும் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். கடன்கள் அனைத்தும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களிற்கு ஊடாகவே வழங்கப்பட இருக்கிறது. இவ்விடயம் தொடர்பாக கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், கடற்றொழில் கூட்டுறவுச்சங்க அதிகாரிகள், மக்கள் வங்கி அதிகாரிகள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட விசேட கூட்டம் ஒன்று நேற்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

(சு), (பா)

# வீரமும் தீர்க்கதரிசனமும் நிறைந்த போராளி லெப்டினன்ட் சீலன்

## - இளம்பரிதி

(தென்மராட்சி)

வீரமும், தந்திரோபாயமும் நிறைந்த தீர்க்க தரிசனமிக்க போராளி சீலன் (சார்ள்ஸ் அன்ரனி) தமிழினத்தின் எதிர்கால நிலையை முன்பே உணர்ந்து அதற்கேற்ப செயற்பட்டவன். துரோகியின் காட்டிக் கொடுப்பினால் எதிரியின் சுற்றிவளைப்பில் விழுப்புண் ஏற்ற நிலையிலும் பெறுமதி மிக்க ஆயுதம் எதிரியிடம் சிக்கக் கூடாது என்பதற்காக தன் சகபோராளியிடம் தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தை எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டான்.

இவ்வாறு நேற்று முன்தினமிரவு மீசாலை, அல்லாரையில் நடைபெற்ற லெப். சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் ஒன்பதாவது நினைஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ், மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி குறிப்பிட்டார்.

தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா தலைமையில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் நினைவுத்தூபி விளக்கை விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. தேவரண்ணா ஏற்றிவைத்தார் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு தென்மராட்சி இராணுவத் தளபதி திரு. பரணி அண்ணா மலர்மாலை அணிவித்தார்.

இக் கூட்டத்தில் திரு. இளம்பரிதி தொடர்ந்து பேசுகையில் ஒரு சில ஆயுதங்களுடன் ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் இப்போது பெரும் படையெடுப்பையும் தடுத்து வென்று நின்று போராடுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. உலகின் நவீனகர டாங்கிகளை தகர்க்கவும், போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தவும் வலிமை பெற்றுள்ளது. பரந்த வெளிகளில் இராணுவம் வரலாம், போகலாம் ஆனால் நிலைபெற முடியாது. இது வரலாறுதந்த பாடம் என்றார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. தேவர் அவர்கள்; பிரேமதாசா கம்உதாவ என்ற பெயரில் சிங்கள மக்களுக்கு பலகோடி ரூபா செலவில் நவீன வசதிகள் செய்து கொடுத்துவிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக பல கோடி ரூபா செலவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் என்று தெரிவித்தார். தொடர்ந்து அவர் பேசுகையில்;

போராளிகளின் இழப்புகள் ஈடு செய்யப்பட வேண்டும் இல்லாவிடில் ஒரு கட்டத்தில் அனைவரும் அவமே இறக்க நேரிடும். இதனையுணர்ந்து நீங்கள் அனைவரும் போராட்டத்தில் இணையுங்கள் இதுவே சீலன் போன்ற போராளிகளுக்கு நீங்கள் செய்யும் அஞ்சலியாகும் என்றார்.

மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சி பேசுகையில் துரோகிகளின் காட்டிக் கொடுப்பினால்உயிர்கள்உடைமைகள் இழக்கப்பட்டபோதும் விடுதலைப் போராட்டம் சோர்ந்து விடவில்லை மாறாக வீறு கொண்டு வருகிறது. துரோகிகள் எப்படியும் இனங் காணப்படுவார்கள். துரோகிகளையும், எதிரிகளையும் அழிக்கும்வரை எமது போராட்டம் தொடரப்பட வேண்டும் என்றார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கவிஞர் நிலாதமிழின்தாசனின் கவிதாஞ்சலியும், தென்மராட்சி கலைபண்பாட்டுக்கழகத்தினரின்கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (35)

## க. பொ. த. (உ/த) பரீட்சை அனுமதிஅட்டைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தர பரீட்சை 1992 இற்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நாளை தபால் மூலமும், பாடசாலை மாணவர்களுக்கானது அந்தந்தப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் காகிதாதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான காகிதாதிகள் நேற்று யாழ். கல்வித்திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டிருக்கிறது. எனவே மேற்படி பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(க) (ச) (75)

## நாளை ஆங்கிலப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையின் பகுதி ஒன்று நாளை 18 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். கல்வித்திணைக்களத்தில் இன்று பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## இந்திய ஜனாதிபதியாக சங்கர் தயாள் சர்மா தெரிவு

டாக்டர் சங்கர்தயாள்சர்மா (74)இந்தியக்குடியரசின் 9-வது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட சங்கர் தயாள்சர்மா தன்னை எதிர்த்துப்போட்டியிட்ட தேசிய முன்னணி, பாரதீய ஜனதாக்கட்சிகளின் ஆதரவில் போட்டியிட்ட வேட்பாளர் பேராசிரியர் ஜி. வி. சுவெல்லை 3,29,379 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

சங்கர் தயாள்சர்மா 64.78 வீதமான வாக்குகளையும், பேராசிரியர் ஜி. வி. சுவெல் 33.21 வீதமான வாக்குகளையும் பெற்றனர்.

மருந்துப்

னங்கள் முயற்சி எடுத்தன. இம்முயற்சி கூட்டுப்படைகளின் அலுவலகம் விதித்த தடை காரணமாக கைவிடப்பட்டிருக்கிறது.

அதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கும் சுகாதாரத் திணைக்களத்திற்கும் தேவையான அளவு மருந்துப் பொருட்கள்அனுப்பி வைக்கப்படுவதில்லை. இதனால் இம் மாவட்டத்தில் மருந்துப் பொருள்களுககு நிலவிவரும் பற்றாக்குறையை நீக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. (க), (பா)

யாழ்.

சாங்க அதிபர், கல்விப்பணிப்பாளர் உட்பட நான்கு அரச அதிகாரிகளும் கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுடன் கொழும்பில் சிகிச்சை பெறவென யாழ். போதனா வைத்தியசாலையினால் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளும் செல்லவுள்ளனர். (பா)

பயந்து

விசாரணைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும்,

இவர்களை கண்டு பிடித்து கைது செய்வதற்கான பணியில் இராணுவப் பொலிசார் ஈடுபடுத்தப்படுவர் என்றும் இவர்களுக்கு உதவுமுகமாக பொலிசாரின் உதவி கோரப்படும் என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி அழகம்மா நல்லையா

திருமதி அழகம்மா நல்லையா (இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்) காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. ச. நல்லையாவின் [முன்னாள் ஆசிரியர், திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) அன்பு மனைவியும், திருமதி அங்கயர்க்கண்ணி ராதாகிருஷ்ணன் (கனடா), சிறிதரன் (பங்காளர் V. S. B Group, ஸ்ரான்லி வீதி), பகீரதன் [ஜேர்மனி], அனிதாகினி [விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்], வீரச்சாவடைந்த பாஸ்கரன் [லெப். கரன், சூட்டி], அனுராதா ஆகியோரின் அருமைத் தாயாரும், க. ராதாகிருஷ்ணன் [முன்னாள் உத்தியோகத்தர் எயர்லங்கா நிறுவனம்] அவர்களின் அன்பு மாமியும், ஜதுநந்தனின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-07-92 [இன்று] வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந. சிறிதரன் (மகன்)

25, பாஸ்கரன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். [2828]

## க. பொ. த. (உ / த) 1992 நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| 1-8-92 | 8.30 — 10.30 விலங்கியல் i<br>8.30 — 11.30 பிரயோக கணிதம் i சரித்திரம் ii | 12.30 — 15.30 சரித்திரம் I |
| 3-8-92 | 8.30 — 11.30 பிரயோக கணிதம் ii விலங்கியல் ii சித்திரம் i | 12.30 — 15.30 மனைப்பொருளியல் i |
| 4-8-92 | 8.30 — 11.30 மனைப்பொருளியல் ii தூயகணிதம் i | |
| 5-8-92 | 8.30 — 10.30 தாவரவியல் i தமிழ் i | 12.30 — 15.30 தூயகணிதம் II |
| 6-8-92 | 8.30 — 11.30 தாவரவியல் ii தமிழ் ii | 12.30 — 15.30 சங்கீதம் கர்நாடகம் I சங்கீதம் மேலைத்தேயம் I |
| 7-8-92 | 8.30 — 10.30 இரசாயனம் i பொருளியல் i | 13.30 — 16.30 நாட்டியம் பரதம் i |
| 8-8-92 | 8.30 — 11.30 இரசாயனம் - ii நாட்டியம் பரதம் - ii | 12.30 — 15.30 சங்கீதம்கர்நாடகம்- ii சங்கீதம் மேற்கத்தியம் - ii |
| 10-8-92 | 8.30 — 11,30 பௌதிகம் - i கணக்கியல் - i | |
| 11-8-92 | 8.30 — 11.30 பௌதிகம் ii கணக்கியல் - ii | 12.30 — 15.30 விவசாயவிஞ்ஞானம் i |
| 13-8-92 | 8.30 — 11.30 பொருளியல் - ii | 12.30 — 15,30 விவசாயவிஞ்ஞானம்ii |
| 14-8-92 | 8.30 — 11.30 சித்திரம் - ii ஆங்கிலம் - i | 13.30 — 16.30 இந்துசமயம் - i கிறிஸ்தவசமயம் - i சமஸ்கிருதம் - i |
| 15-8-92 | | 12.30 — 15.30 இந்துசமயம் - ii கிறிஸ்தவசமயம் - ii சமஸ்கிருதம் - ii |
| 17-8-92 | 8.30 — 11.30 அரசியல் மூலதத்துவம் i | 12.30 — 15.30 வர்த்தகம் i |
| 18-8-92 | 8.30 — 11.30 புவியியல் i | 12.30 — 15.30 வர்த்தகமும் நிதியும் ii |
| 19-8-92 | 8.30 — 11.30 புவியியல் ii | 12.30 — 15.30 இந்துநாகரிகம் i இஸ்லாமிய நாகரிகம் i |
| 20-8-92 | 8.30 — 11.30 புவியியல் iii | 12.30 — 15.30 இந்துநாகரிகம் ii |
| 21-8-92 | 8.30 — 11.30 சித்திரம் iii ஆங்கிலம் ii | 13.30 — 16.30 அளவையியல் i |
| 22-8-92 | 8.30 — 11.30 அரசியல் மூலதத்துவம் ii | 12.30 — 15.30 நாடகமும் அரங்கியலும் i |
| 24-8-92 | 8.30 — 11 30 நாடகமும் அரங்கியலும் ii | 12.30 — 15.30 அளவையியல் ii |
| 25-8-92 | 8.30 — 10.30 நாடகமும் அரங்கியலும் iii | |

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

16. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4910

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 42-728, 42-1464, 28-3969, 27-6821, 24-6855, 42-0488, 24-4875, 43-3239, 21-9825, 26-6722, 26-3962, 25-4381, 36-3440, 22-9257, 24-6439, 24-3063, 26-3722, 24-2545, 26-7663, 42-0349, 27-5197, 42-5556, 41-9530, 24-2359, 36-2482, 25-6699, 41-5602, 24-5258, 26-536, 24-4390, 28-3439, 24-6431, 42-5080, 41-9478, 26-3410, 41-4418, 36-2993, 25-9661, 72-9437.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 42-7033, 42-4127, 42-2555, 42-2397, 27-3927, 28-1794, 28-4183, 24-422, 36-9139, 25-1908, 25-1023, 70-7383,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.